



# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 11 சோபகிருது வருடம், ஆனி மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை
(06.07.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 17 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50





# சீரற்ற காலநிலை: மக்கள் அவதி!



## மலையகத்தின் பல இடங்களில் மண்சரிவு அபாயம்

## நுவரெலியா, ஹட்டன் பாடசாலைகளுக்கு விடுமுறை





ஆ. ரமேஸ்

சீரற்ற காலநிலையினால் நுவரெலியா மாவட்டத்தில் பாடசாலை கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலையில் நுவரெலியா மற்றும் ஹட்டன் கல்வி வலயங்களில் இன்று(06) மற்றும் நாளை(07) ஆகிய இரு தினங்களுக்கு பாடசாலைகளை மூடுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் எல்.அபேரத்ன உத்தியோகபூர்வமாக அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலையால் மலையகத்தின் நகரங்கள் பலவற்றின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது. வீதிகளை அண்டிய இடங்களில் மரங்கள் முறிந்ததால் பல இடங்களில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா ப்ரவுன்ஷீக் தோட்ட எமலீனா பிரிவில் நேற்று மதியம் 2 மணிக்கு கடும் மழையுடன் வீசிய காற்றின் காரணமாக தொழிலாளர்கள் குடியிருப்பு மீது சுமார் 200 அடி உயரம் கொண்ட மரம் சரிந்ததால் 04 குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

02 பக்கம்

# நிறுத்தப்பட்ட திட்டங்கள் செப்டெம்பரில் ஆரம்பம்

## அரசாங்கம் அறிவிப்பு

நா. தினுஷா

ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்ததாலேயே இன்று நாட்டில் ஓரளவு மாற்றத்தையாவது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. வேறு எவருமாக இருந்திருந்தால் மொத்த வேலைத்திட்டமும் தோல்வியையே சந்தித்திருக்கும். எனவே, இடைநிறுத்தப்பட்டுள்ள சகல வேலைத்திட்டங்களையும் எதிர்வரும் செம்டெம்பர் மாதமாகும்போது மீள ஆரம்பிக்கக் கூடியதாக இருக்குமென அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (05) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

02 பக்கம்

கமெண்ட் கந்தர்...




# கரும்புலிகள் தினம் யாழில் அனுஷ்டிப்பு




யாழ். செய்தியாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கரும்புலிகள் நினைவேந்தல் நிகழ்வு நேற்று (05) உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. பல்கலைக் கழகத்தின் பிரதான வளாகத்தில் கரும்புலிகளின் நினைவுப் படத்துக்கு மாணவர்களால் ஈகைச் சுடரேற்றி மலரஞ்சலியும் அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

# உழைக்கும் மக்களுக்கு ரூ.12 ட்ரில்லியன் இழப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் சபையில் சுட்டிக்காட்டு



உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளினால் உழைக்கும் மக்களுக்கு 12 ட்ரில்லியன் ரூபா இழப்பு ஏற்படுமென Verite Research நிறுவகம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் நேற்று (05) சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நிதிக் குழுவில் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரிகளிடம் கேள்விகள் கேட்கும்போது, இந்தப் பண இழப்பின் அளவு குறித்து தெரிந்து கொள்ளலாம்.

» 02 பக்கம்

# நாளொன்றில் 189 டெங்கு நோயாளர்கள்

கே. சுபானி

நாட்டில் நாளொன்றுக்கு 189 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்படுவதுடன் நடப்பாண்டில் ஜனவரி முதல் ஜூலை 5ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 50ஆயிரத்து 264 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவு நேற்று (05) வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

நாடு முழுவதும் தற்போது மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை நிலவி வருகின்ற நிலையில், பொதுமக்கள் டெங்கு நுளம்பு பெருகும் அபாயமுள்ள இடங்கள் குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும்.

இந்நிலையில் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாடு முழுவதிலுமுள்ள 43 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

அந்தவகையில், கடந்த ஜனவரி முதல் ஜூலை 05ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் நாடுமுழுவதும் 50ஆயிரத்து 264 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இதுவரை 31 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

02 பக்கம்



முல்லைத்தீவு, கேப்பாப்புலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி இராணுவ முகாமின் பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக பொதுமக்கள் நேற்று (05) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**படப்பிடிப்பு:** *முல்லைத்தீவு செய்தியாளர்*

# கஞ்சா பயிர்ச்செய்கை அடுத்த மாதம் ஆரம்பம்

## இராஜாங்க அமைச்சர் டயனா தெரிவிப்பு

கே. சுபானி

கஞ்சா பயிர்ச்செய்கைதிட்டம் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

02 பக்கம்

# 37 பில்.டொலர் கடன் நிலுவையில்

## செலுத்தத் தவறினால் ஆட்சி கவிழும் என்கிறார் அமைச்சர் பந்துல

சர்வதேச கடன்களை மீளச் செலுத்தும் வேலைத்திட்டத்துக்கமைய 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியில் அரசாங்கம் செலுத்தியிருக்கவேண்டிய மொத்த கடன் தொகை 37 பில்லியன் அமெரிக்க டொலராகும். அதனடிப்படையில், 37 சதவீதத்தை எதிர்வரும் ஐந்து வருடங்களில் மீளச் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

02 பக்கம்

# சட்டமூலம் திருத்தப்படும்

நா. தினுஷா

ஒளி, ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டமூலத்துக்கு இலத்திரனியல் ஊடகச் சங்கம் எதிர்ப்பை தெரிவித்துள்ள நிலையில், அந்த சங்கத்துடன் இந்த வாரம் அல்லது அடுத்த வாரத்தில் கலந்துரையாடலை நடத்த எதிர்பார்த்துள்ளோம். அவர்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்களுடன் சட்டமூலத்தை விரைவில் மீண்டும் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாக...

02 பக்கம்

# இராகலை தீ விபத்தில் 20 குடியிருப்புகள் சேதம்



ஆ. ரமேஸ்

இராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராகலை கீழ்ப்பிரிவில் 20 வீடுகளைக்கொண்ட தொடர் குடியிருப்பில் நேற்று (05) காலை 10.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் 20 வீடுகள் முற்றாக எரிந்து தீக்கிரையாகின.

இந்த வீடுகளில் குடியிருந்த 20 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேர் இதனால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

02 பக்கம்

## உஷ்



*முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவராக கொண்டுவர முயற்சிகள் நடக்கின்றனவாம்.*

*அடுத்த ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து சிலரால் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்.*

*கட்சிக்குள் மீண்டும் வருவதாயின் மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் பொறுப்புகள் வழங்கப்படக்கூடாதென சந்திரிகா தரப்பில் சொல்லப்படுகிறதாம். பேச்சுகள் தொடர்ந்து நடப்பதாகக் கேள்வி.*

# உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை மீள இணைக்க தனிநபர் பிரேரணை

## ஆளுங்கட்சி சமர்ப்பித்ததால் சபையில் அமைதியின்மை

நா. தினுஷா

உள்ளூராட்சி மன்றங்களில் இருந்த முன்னாள் உறுப்பினர்களை மீண்டும் சேவைக்கு இணைத்துக் கொள்வது தொடர்பிலான இரு தனிநபர் பிரேரணைகள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொடவினால் நேற்று (05) பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று ஆரம்பமான சபை அமர்வின்போது, பிரதேச சபை திருத்தச் சட்டமூலம் மற்றும் நகர சபை திருத்தச் சட்டமூலம் என்பனவே ஜயந்த கெட்டகொட எம்.பியினால் தனிநபர் பிரேரணைகளாக முன்வைக்கப்பட்டன. இதனை பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன வழிமொழிந்தார்.

அதன்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தமையினால்...

02 பக்கம்

# பிரைட் ரைஸ், கொத்து ரொட்டி விலை குறைப்பு

கே. சுபானி

பிரைட் ரைஸ் மற்றும் கொத்து ரொட்டி ஆகியவற்றின் விலைகள் 10 வீதத்தால் குறைக்கப்படுவதாக உணவக உரிமையாளர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

எனினும், தாம் மேற்படி உணவுப்பொருட்களின் விலைகளை குறைக்கத் தயாரில்லை என உணவக உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உலகச் சந்தையில் எரிவாயுவின் விலை குறைவடைந்துள்ள நிலையில் லிட்ரோ எரிவாயு நிறுவனம் எரிவாயுவின் விலையை நேற்றுமுன்தினம் (04) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைத்திருந்தது.

இவ்வாறு எரிவாயுவின் விலை குறைப்பால் நுகர்வோர் பயன்பெறும் வகையில் நேற்று (05) முதல் கொத்து ரொட்டி மற்றும் பிரைட் ரைஸ் ஆகியவற்றின் விலைகளை 10 வீதத்தால் குறைக்க உணவக உரிமையாளர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.இதுகுறித்து உணவக உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவிக்கையில்,

உணவகங்களுக்கான மின் கட்டணத்தில் 27 வீதம் குறைக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது சுமார் 5 ஆயிரத்து 100 ரூபாவாக இருந்த எரிவாயுவின் விலை சுமார் 2 ஆயிரத்து 900 ரூபாவுக்கு குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நுகர்வோரின் நலன்கருதி கொத்துரொட்டி மற்றும் பிரைட் ரைஸ் ஆகியவற்றின் விலைகளை 10வீதத்தால் குறைக்க தீர்மானித்துள்ளோம்.

உணவகங்களில் மேற்படி உணவுப் பொருட்களின் விலைகளை இன்று முதல் குறைக்காதிருந்தால் குறித்த அந்த உணவகத்தை உங்கள் கைகளிலுள்ள ஸ்மார்ட் போன்களில் புகைப்படமெடுத்து ''இதுதான் அந்த உணவகம். இந்த உணவகத்தில் மேற்படி உணவுகளுக்காக விலைகள் குறைக்கப்படவில்லை'' எனத் தெரிவித்து சமூக வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யுங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் உணவுப் பொதிகளின் விலைகள் குறைக்கப்படாதா? என கேள்வியெழுப்பப்பட்டபோது,

தற்போதைய நிலையில் இறைச்சி, மீன், மரக்கறி உள்ளிட்ட பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் உணவுப் பொதிகளின் விலைகளை குறைக்க முடியாது என அவர் தெரிவித்தார். உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ள நிலையில் மேற்படி உணவுப் பொருட்களின் விலைகளை குறைக்க தாம் தயார் இல்லை என உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எரிவாயுவின் விலை குறைக்கப்பட்ட நிலையில் ஏனைய பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை. எனவே தம்மால் விலைக்குறைப்பு செய்ய முடியாது என தெரிவித்துள்ளனர்.

## உள்ளூராட்சிமன்ற...

பாராளுமன்றத்தில் அமைதியின்மையும் ஏற்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,

உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலை நடத்த வேண்டும். ஆனால், நிதி இல்லை என்று கூறி அரசாங்கம் அந்த தேர்தலை ஒத்திவைத்தது. தற்போது, பெசில் ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினரின் யோசனைக்கமைய இந்த யோசனையை முன்வைத்திருக்கிறார்கள். கலைக்கப்பட்ட உள்ளூராட்சிமன்ற சபைகளின் உறுப்பினர்களுக்கு மீண்டும் அழைப்பு விடுப்பதற்காகவே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்த யோசனையின் பிரகாரம் , தேர்தலை நடத்தாமல் கலைந்து சென்ற உறுப்பினர்களை மீண்டும் அழைக்குமாறு பெசில் உள்ளிட்ட தரப்பினரின் பிம்பம் பாராளுமன்றத்தில் யோசனை முன்வைக்கிறது.

இது நகைப்புக்குரிய விடயமாகும். உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் நிர்வாக காலம் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த ஜனநாயக விரோத செயற்பாட்டுக்கு எதிராக நாங்கள் நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்வோம். பெசில் உள்ளிட்ட தரப்பினரின் செயற்பாடுகள் இத்துடன் முடிவடைந்துவிடும். அவர்களின் பிம்பம் நாட்டின் ஜனநாயகத்தை இல்லமலாக்கவே செயற்பட்டு வருகிறது என்று எதிர்ப்பை வெளியிட்டார்.

## நிறுத்தப்பட்ட திட்டங்கள்..

ஜனாதிபதி பதவியை ரணில் விக்கிரமசிங்க ஏற்றிருக்காவிட்டால் நாட்டில் தற்போதுள்ள நிலைமையில் சிறியதொரு மாற்றத்தைக்கூட அவதானித்திருக்க முடியாது. வேறு எவருமாக இருந்தால் ஒவ்வொருவரும் கூறும் விடயங்களுக்கு பதிலளிக்க முயற்சித்து ஒட்டுமொத்த வேலைத்திட்டமும் பின்னடைவை சந்தித்திருக்கும்.

சரியான வேலைத்திட்டமொன்றை தெரிவு செய்து அதன் நோக்கத்தை மாத்திரம் அடைவதற்காக செயற்படும் வாய்ப்பு ஜனாதிபதிக்கு கிடைத்ததன் காரணமாகவே இந்தளவு நாட்டை பாதுகாக்கக் கூடியதாக அமைந்துள்ளது. இதற்கு அப்பால் தொழில்நுட்ப ரீதியான விடயங்கள் இருக்குமாக இருந்தால் அதனை முன்வைக்க வேண்டும்.

கடன் மறுசீரமைப்பை தடுத்து நிறுத்துவதற்காக நாட்டில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுத்த எதிர்க் கட்சி பாரிய திட்டமொன்றை வகுத்திருந்தது. ஆனால், அந்த திட்டம் முழுமையாக தோல்வியை அடைந்துள்ளது. நேற்று (நேற்று முன்தினம்) பங்குச் சந்தையின் சகல விலை பட்டியலிலுள்ள சகல வங்கிகளினதும் பங்குகளும் அதிகரித்து காணப்பட்டது. இதுவே வங்கிகளிலுள்ள வைப்பாளர்களின் கணக்குகளுக்கு சிறிதளவும் பாதிப்பு ஏற்படவில்லை என்பதற்கான சிறந்த உதாரணமாகும். எனவே, யாருடைய வைப்பிலும் பாதிப்பு ஏற்படவும் இல்லை. வட்டி குறையவும் இல்லை. மேலும், ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள உறுப்பினர்களின் கொடுப்பனவுகள் எந்தக் காரணத்துக்காகவும் இல்லாமல் போகாது என்றும், வைப்பாளர்களுக்கு 9 சதவீத நிலையான வட்டி கிடைக்குமென்றும் மத்திய வங்கி ஆளுநர் அறிவித்திருக்கிறார்.

புதிய கடன் உடன்படிக்கைகள் மற்றும் இடைநிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாதகத்தன்மை உருவாகியுள்ளதால், செப்டெம்பர் மாதமாகும்போது இடைநிறுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என்றார்.

## சட்டமூலம்..

அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (05) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்த கலந்துரையாடலில் கடந்த வாரம் கலந்துகொண்டிருந்தேன். அதன்போது எங்களால் முன்வைக்கப்பட்டுள்ள சட்ட யோசனையை நிராகரிப்பதாகவும் அதுதொடர்பில் கலந்துரையாடுவதற்கான வாய்பபைப் பெற்றுக்கொடுப்பதாகவும் அறிவித்து இலத்திரனியல் ஊடகச் சங்கம் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தது. அதனால், இந்த வாரம் அல்லது அடுத்த வாரத்தில் அவர்களுடன் கலந்துரையாடி திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தால் அதற்த திருத்தங்களை மேற்கொண்டு இணங்க முடியாத விடயங்கள் எதுவும் இருக்குமாக இருந்தால் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொடுப்பதற்கான சரியான முறையை வகுக்க எதிர்பார்த்துள்ளோம்.

அமைச்சர் என்றவகையில், ஊடக நிறுவனங்களுக்கு நினைத்தது போன்று அனுமதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு எனக்கிருக்கும் எதேச்சதிகாரத்தை நீக்கிக்கொள்வது தொடர்பிலேயே கலந்துரையாடி வருகிறோம். தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரம் நான் நினைத்ததுபோன்று அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொடுக்கவும் அனுமதியை இரத்துச் செய்யவும் நீதிமன்ற செயன்முறைக்கு உட்படுத்தவும் எனக்கு அதிகாரம் இருக்கிறது. அவ்வாறு அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான எண்ணம் எங்களுக்கு அவசியமில்லை.

மீண்டும் நாட்டில் குற்றவியல் சட்டவிதிகளை கொண்டுவருவதா இல்லையா என்பது தொடர்பிலும் கலந்தாலோசித்து ஒரு தீர்மானத்தை எடுக்கக் கூடியதாக இருக்கும்.

## இராகலை தீ...

குடியிருப்புகள் தீப்பற்றிக்கொண்டதையடுத்து பொலிஸாருக்கும் தீயணைப்புப் பிரிவினருக்கும் தகவல் வழங்கப்பட்டது. எனினும், அப்பகுதி மக்கள் மாத்திரம் ஒன்றிணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினர். இதன்போது உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படாதபோதிலும் பெருமளவில் பொருட் தேசங்கள் ஏற்பட்டுள்ளன. வீட்டு உபகரணங்கள், முக்கிய ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் சீருடைகள் மற்றும் பாடப் புத்தகங்கள் தீக்கிரையாகியுள்ளன என்று மக்கள் தெரிவித்தனர். ஒரு சில பொருட்கள் மாத்திரமே மக்களால் பாதுகாக்கக்கூடியதாக இருந்தன.

இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை தோட்ட வைத்தியசாலையில் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், நுவரெலியா பிரதேச சபை ஆகியன ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் இதுவரையும் கண்டறியப்படவில்லை என தெரிவிக்கும் இராகலை பொலிஸார், நுவரெலியா பொலிஸ் கைரேகை அடையாளப்பிரிவுடன் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.





# தனியார் பஸ்களில் இடம்பெறும் அநீதிகளை முறையிட ஏற்பாடு

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அமைச்சர் பந்துல ஆலோசனை

நா. தினுஷா

தனியார் பஸ்களில் கட்டண விபரங்களை காட்சிப்படுத்துவது தொடர்பிலும் பயணிகளுக்கு இடம்பெறும் அநீதிகள் குறித்து உடனடியாக முறைப்பாடு ஏற்பதற்கான புதிய முறையொன்றை உருவாக்குவதற்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கவுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்தள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (05) இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

தனியார் பஸ்களை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கே இருக்கிறது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு அமையவே பஸ் கட்டணங்கள் திருத்தப்படுகின்றன. அதற்கு என்னிடம் அனுமதி மாத்திரமே கோருவார்கள். இம்முறை கட்டண அதிகரிப்போ அல்லது குறைப்போ இடம்பெறவில்லை. தற்போதுள்ள கட்டணத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பஸ்களில் பஸ் கட்டண விபரத்தை காட்சிப்படுத்துதல் உள்ளிட்ட ஒவ்வொரு செயற்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கு உடனடியாக அறிவிக்கிறேன். குறிப்பாக பஸ் கட்டண விபரத்தை காட்சிப்படுத்துவதற்கும் பயணிகளுக்கு அநீதி இழைக்கப்படும் போது உடனடியாக அதுதொடர்பில் முறைப்பாடு செய்வதற்கும் இடமொன்றை ஸ்தாபிப்பதற்கும் ஆலோசனை வழங்க எதிர்பார்த்துள்ளேன்.

மேலும், முறைப்பாடுகளை உடனடியாக ஏற்கக் கூடிய முறையொன்றை உருவாக்குமாறும் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கவுள் ளேன் என்றார்.

# கார் விபத்தில் இருவர் காயம்



திருமலை செய்தியாளர்

திருகோணமலை - ஹொரவப்பொத்தானை பிரதான வீதி மஹதிவுல்வெவ குளத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்து நேற்று புதன்கிழமை(05) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது காற்றின் வேகத்தினால் மஹதிவுல்வெவ குளத்துக்கு அருகில் வேகமாக வந்த கார் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

ஹொரவப்பொத்தானை கல்பே பகுதியைச் சேர்ந்த 50 மற்றும் 55 வயதுகளையுடையவர்களே இவ்விபத்தில் காயமடைந்துள்ளனர். விபத்து தொடர்பில் மொரவெவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கஞ்சா பயிர்ச்செய்கை..

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்டுநாயக்கவிலுள்ள முதலீட்டுச் சபை வலயத்துள் மேற்படி கஞ்சா வளர்ப்பு செயற்றிட்டம் அடுத்த மாதம் முதல் முன்னெடுக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 11 முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர்.

இந்த செயற்றிட்டத்தால் இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் 4 முதல் 5 பில்லியன் ரூபா வருமானம் ஈட்ட முடியும்.மேலும் இச்செயற்றிட்டத்துக்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ள அதேவேளை,

இத்திட்டத்தில் இணைந்துகொள்வதற்கு சுமார் 11 முதலீட்டாளர்கள் ஆர்வமாக உள்ளனர். கஞ்சா பயிர்ச்செய்கைக்கும் அதன் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கும் அவர்களே பொறுப்பாவார்கள். இவ் உற்பத்திகள் நாட்டின் வருமானத்துக்கு பங்களிக்கும்.

கடந்த கால முயற்சியை தோற்கடித்தது போன்று இந்த செயற்றிட்டத்தை தோற்கடிக்க முடியாது. அதற்கு அனுமதிக்கமாட்டேன் என அவர் தெரிவித்துள்ளார்.

## சீரற்ற காலநிலை..

அங்கு விரைந்த மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தலைமையிலான பொலிஸார், தோட்ட நிர்வாகம் மற்றும் தொழிலாளர்கள் இணைந்து பாரிய மரத்தை வெட்டி அகற்றியுள்ளனர்.மேலும் அப் பகுதியில் பாரிய மரங்கள் உள்ளதால் நிர்வாகம் நிர்க்கதிக்குள்ளானவர்களை தனியாக தோட்ட குடியிருப்பு ஒன்றில் தற்காலிகமாக தங்கவைத்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

மலைநாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அடை மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவால் சிலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**மண்சரிவு**

நுவரெலியா பிரதேச செயலக பிரிவு,அம்பகமுவ ஆகிய பகுதிகளில் மண்சரிவு அபாயம் இருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. இந்த எச்சரிக்கை இன்று முற்பகல் 11 மணிவரை நடைமுறையில் இருக்குமென அறிவிக்கப்படுகிறது. மேல் கொத்மலை,பொல்கொல்ல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் நீரேந்து பகுதிகளில் உள்ள மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## 37 பில்.டொலர்..

யாராவது ஆட்சிப் பொறுப்பேற்று அறியாமையினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் திரிபுபட்டு இணக்கப்பாடுகள் சிக்கலுக்குள்ளானால் 30 நாட்களுக்கு மேல் அந்த அரசாங்கத்தை யாராலும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதுடன் அடுத்த தேர்தலில் முன்னிலையாகும் அரசியல் கட்சி அல்லது குழு சார்பானவர்கள் கட்டாயம் அவர்களின் தேர்தல் கொள்கைத் திட்டத்தில் கடன் மீள்செலுத்துகை தொடர்பில் முறையான திட்டங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (05) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது நாட்டிலிருந்த ஒவ்வொரு அரசாங்கமும் தேசிய மற்றும் சர்வதேச கடன்களைப்பெற்றே நாட்டிலுள்ள அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பெற்ற கடன்களை மீளச் செலுத்தி வந்தாலும் செலுத்த முடியாதளவுக்கு கடன் பெறப்பட்டது. நாளாந்த செயற்பாடுகளுக்குத் தேவையான வருமானம் எம்மிடம் இல்லாததால் அதற்காக எந்த அரசாங்கமாக இருந்தாலும் கடன்பெற்றே ஆகவேண்டும்.

பெற்றுக்கொண்ட கடன்களை மீளச் செலுத்த முடியாத சந்தர்ப்பங்களில் அதற்கான சர்வதேசத்தில் அதிக வட்டியில் மீண்டும் கடனை பெற்றுக்கொண்டோம்.

அதற்கமைய, 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி 1250 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி 1000 மில்லியன் டொலரும் 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி 500 மில்லியன் டொலரும் மீளச் செலுத்த வேண்டியுள்ளது.

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 03ஆம் திகதி 650 மில்லியன் டொலர் கடன் தொகையை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03ஆம் திகதி 1500 மில்லியன் டொலர் கடன் தொகையை மீளச் செலுத்தவேண்டியுள்ளது. 2026 ஆம் ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி 1000 மில்லியன் டொலரும் 2027ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி 1500 மில்லியன் டொலரும் 2028 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி 1250 மில்லியன் டொலரும் 2029 ஆம் ஆண்டு மார்ச் 14 ஆம் திகதி 1400 மில்லியன் டொலரும் 2030 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி 1500 மில்லியன் அமெரிக்க டொலரும் செலுத்த வேண்டியுள்ளது.

ஆகவே, 2025ஆம் ஆண்டு வரை நாட்டை யார் ஆட்சி செய்தாலும் இந்த கடன்களை மீளச்செலுத்துவதற்கு அவர்கள் சட்ட ரீதியாக கடமைப்பட்டுள்ளார்கள். இதிலுள்ள பாரதூர தன்மையை நாடென்ற அடிப்படையில் நாம் சகலரும் புரிந்துகொள்ள வேண்டும்.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் மீள்செலுத்தவேண்டிய 37 பில்லியன் அமெரிக்க டொலர் நிலுவையில் இருக்கிறது. இந்த 37 பில்லியன் டொலரில் நூற்றுக்கு 37 சதவீதத்தை எதிர்வரும் ஐந்து வருடங்களில் மீளச் செலுத்த வேண்டியது அவசியமாகும். மீதம் 51 சதவீதத்தை எதிர்வரும் ஆறு முதல் 20 வருடங்களில் செலுத்த வேண்டும். 12 வீதத்தை 20 வருடங்களின் பின்னர் செலுத்த வேண்டும். அவ்வாறாயின் 2044 ஆம் ஆண்டு வரை இந்த கடன்களை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, போலியான தகவல்களினூடாக மக்கள் ஏமாறுவதை தவிர்ப்பதற்காக, எதிர்காலத்தில் க அரசாங்கத்தைப் பொறுப்பேற்பதற்கு முன்வரும் அரசியல் கட்சி அல்லது குழுவின் சார்பில் பிரசன்னமாகும் நபர் இந்த கடன் தொகையை எவ்வாறு முறையாக செலுத்துவது என்பது தொடர்பில் அவர்களின் தேர்தல் பிரசாரங்களில் உள்ளடக்கி அதனை செலுத்தும் முறையையும் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் நாடென்ற வகையில் சர்வதேச மட்டத்தில் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களையும் முன்னெடுக்க முடியாத நிலை ஏற்படும்.

2044 ஆம் ஆண்டு வரையில் செலுத்த வேண்டியுள்ள கடன்களை மீளச் செலுத்துவதற்கு சரியான திட்டங்கள் இல்லையென்றால் கறுப்பு பட்டியலில் உள்ளிடப்படுவோம். விரும்பியோ விரும்பாமலோ எமக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்படும். இந்நிலையில், யாராவது ஆட்சி பொறுப்பேற்று அறியாமையினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் திரிபுபட்டு இணக்கப்பாடுகள் சிக்கலுக்குள்ளானால் 30 நாட்களுக்கு மேல் அந்த அரசாங்கத்தை யாராலும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்றார்.

## நாளொன்றில் 189..

மேல் மாகாணத்தில் இதுவரை 25ஆயிரத்து 48 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமன்றி மத்திய மாகாணத்தில் 4 ஆயிரத்து 124 டெங்கு நோயாளர்களும் வடமேல் மாகாணத்தில் 4 ஆயிரத்து 599 பேரும் சப்ரகமுவ மாகாணத்தில் 3ஆயிரத்து 937 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் 11ஆயிரத்து 3 பேரும் கொழும்பில் 10ஆயிரத்து 801 பேரும் களுத்துறையில் 3 ஆயிரத்து 244 பேரும் கண்டியில் 3ஆயிரத்து 175 பேரும் புத்தளத்தில் 2 ஆயிரத்து 766 பேரும் குருநாகலையில் ஆயிரத்து 833 பேரும் கேகாலையில் ஆயிரத்து 970 பேரும் இரத்தினபுரியில் ஆயிரத்து 967 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மாதம் ஆரம்பம் முதல் நேற்று (05) வரையான ஐந்து நாட்களுக்கு 944பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் கடந்த ஜனவரி மாதம் 8ஆயிரத்து 963பேரும் பெப்ரவரியில் 6 ஆயிரத்து 709 பேரும் மார்ச்சில் 6ஆயிரத்து 419 பேரும் ஏப்ரலில் 7ஆயிரத்து 617 பேரும் மே இல் 9ஆயிரத்து 696 பேரும் ஜூனில் 9ஆயிரத்து 916 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## உழைக்கும் ...

அவ்வாறான சந்தர்ப்பத்தை எதிர்க்கட்சிகளுக்கு அரசாங்கம் வழங்கவில்லை. எந்தவொரு சாத்தியக்கூறு ஆய்வையும் மேற்கொள்ளாமலே அரசாங்கம் தேசிய கடன் மறுசீரமைப்பு போன்ற முன்மொழிவை மேற்கொண்டுள்ளது.

ஆனால் தனியார் ஆய்வு நிறுவனம் ஒன்று இவ்வாறான ஆய்வை மேற்கொண்டுள்ளது.இன்று நம் நாட்டில் ஒரு அசாதாரணமான சூழல் நிலவுவதாகவும் நிதியினால் பொருளாதார சமூகப் பேரழிவு ஏற்பட்டுள்ள இவ்வேளையில் மாற்று அரசாங்கம் என்ற வகையில் எதிர்க்கட்சிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் நாட்டில் உள்ள பொருளாதார சமூகப் பிரச்சினைகள் தொடர்பில் தெரிவுக்குழுக் கூட்டங்களுக்குச் சென்று உரிய அதிகாரிகளிடம் தகவல்களைக் கேட்கும் உரிமை உள்ளது.

ஆனால் நிதிக்குழுவில் அந்த அதிகாரிகளிடம் கேள்வி கேட்க வாய்ப்பு வழங்காதது தவறு என்றார்.

# சிறுவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வு காணும் பொறிமுறையைத் தயாரிக்கவும்

## கோபா குழுவின் தலைவர் பரிந்துரை




பிரதேச மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை சிறுவர்கள் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு பொறிமுறையொன்றைத் தயாரிக்குமாறு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்துக்கு கோபா குழுவின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான லசந்த அழகியவண்ண பரிந்துரை செய்துள்ளார்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் 2019/2020/2021 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் செயலாற்றுகை தொடர்பில் ஆராயும் நோக்கில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் அண்மையில் (04) அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தபோதே இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, பாடசாலை செல்லாத சிறுவர்கள் தொடர்பில் அடையாளம் காண்பதற்குத் தகவல் கட்டமைப்பொன்றைப் பேணுவது மிகவும் முக்கியமானது. இதனால் இது பற்றிய தகவல்கள் ஒவ்வொரு மாதமும் அல்லது இரண்டு மாதங்களுக்கொரு தடவை பாடசாலைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு தகவல் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். எனவே, இது தொடர்பில் கல்வியமைச்சு வேலைத்திட்டமொன்றை தயாரிப்பது அவசியமானது. பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் தொடர்பில் விரைவாகக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பது முக்கியமானது என்றும் தெரிவித்தார்.

அத்துடன், 23,50000 ரூபா செலவில் ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்தை நடைமுறைப்படுத்த ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் தொடர்பான குழுவுக்கு பிந்திய மற்றும் பிழையற்ற அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்காக 2018ஆம் ஆண்டு இந்தத் திணைக்களத்துக்கு வழங்கிய UNCRC தகவல் கட்டமைப்பைப் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளாமை குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இந்தத் தகவல் கட்டமைப்பில் நடைமுறைச் சிக்கல்கள் சில இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கமைய தகவல் கட்டமைப்பை விரைவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் சட்ட விதிகளைப் புதுப்பிப்பது தொடர்பில் இங்கு சமுகமளித்திருந்த அதிகாரிகளிடம் கோபா குழு வினவியதுடன், ஒகஸ்ட் 08ஆம் திகதிக்குள் இது தொடர்பில் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு தெரிவித்தது. இந்தத் திணைக்களத்திடம் கணக்காய்வுக் குழு இல்லையென்பதும் இங்கு புலப்பட்டது.

எனவே, இந்த மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அக்குழுவை நியமிக்கமாறும் இக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை குறித்து கோபா குழுவுக்குத் தெரியப்படுத்துமாறும் அதன் தலைவர் அறிவுறுத்தல் வழங்கினார்.

சட்ட அதிகாரிப் பதவி வெற்றிடமாக இருப்பது தொடர்பிலும் அதற்கான அதிகாரியை நியமிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

சிறுவர்கள் தொடர்பான சம்பவங்களை ஊடகங்கள் மூலம் வெளியிடும்போது சிறுவர் உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது, குழந்தைகளின் எதிர்கால நலனுக்காக எவ்வாறு செயற்படுவது, இணையத்தில் சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் பெறப்படும் முறைப்பாடுகளை விசாரிப்பதில் தாமதம் ஆகியவை குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான கலாநிதி சுரேன் ராகவன், டயானா கமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி மேஜர் பிரதீப் உந்துகொட மற்றும் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.





தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வி.ஆனந்தசங்கரி நேற்று தமிழன் பத்திரிகை அலுவலகத்துக்கு வருகைதந்தார். லிபர்ட்டி பப்ளிகேஷன் நிறுவனத் தலைவர் திலித் ஜயவீரவுடன் அவர் பேச்சு நடத்துவதையும் பத்திரிகை ஆசிரியருக்கு நினைவுச் சின்னமொன்றை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

படங்கள்: பிரதீப் தம்பரகே

# கோப்,கோபா கூட்டங்களின் தகவல்களை எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்குக!

## குழுக்களின் தலைவர்களுக்கு சபாநாயகர் அறிவுறுத்தல்



அரசாங்க நிதி பற்றிய குழு மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டங்களின் தகவல்களை எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்குவதற்கு மேற்படி குழுக்களின் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென சபாநாயகர் சபைக்கு வலியுறுத்தினார்.

அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டம் கடந்த ஜூன் 29ஆம் திகதி இடம்பெற்றது. அக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கலந்துகொண்டதாகவும் இதன்போது அவருக்கு கருத்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவில்லையெனவும் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் ஆகியோரால் ஜூன் 30 ஆம் திகதியன்று இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தின் போதும் ஜூலை முதலாம் திகதியன்று பாராளுமன்ற சபையிலும் தனது கவனத்துக்குக் கொண்டுவந்ததாகவும் அது தொடர்பில் தன்னிடம் தீர்மானமொன்றைக் கோரியிருந்ததாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (05) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இது தொடர்பில் நிலையியற் கட்டளைகள் மற்றும் பாராளுமன்ற மரபுகள் குறித்து தன்னால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும் அதற்கமைய, பாராளுமன்ற சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், சபை முதல்வர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய பதவிகளுக்கு பாராளுமன்றக் கட்டமைப்புக்குள் சிறப்புரிமைகள் காணப்படுகின்றன. இந்தப் பதவிகளை வகிக்கும் உறுப்பினர்களுக்குக் குழுக்களின் அலுவல்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு பரந்த இடம் காணப்படுகின்றமையினால் அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவிக்கு நிலையியற் கட்டளைகள் 121(1) இன் பிரகாரம் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறான கூட்டங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவரையோ அல்லது மேலே குறிப்பிடப்பட்ட பொறுப்பான பதவி வகிப்பவர்களையோ அழைப்பது பொருத்தமற்றது. எனவே, குறித்த கூட்டத்தின் தகவல்களை எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்குவதற்கு மேற்குறித்த குழுக்களின் தலைவர்களினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சபாநாயகர் சபைக்கு வலியுறுத்தினார்.

# நடாஷா எதிரிசூரியவுக்கு பிணை

பௌத்த மதம் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட நடாஷா எதிரிசூரியவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. சந்தேகநபர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை விண்ணப்பத்தின் அடிப்படையில் சந்தேக நபரை 1,00,000 ரூபா ரொக்கப் பிணையில் செல்ல கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே உத்தரவிட்டுள்ளார்

# அரசாங்கத்துக்கு சார்பாக செயற்படும் சபாநாயகர்

## ரஞ்சித் மத்தும பண்டார குற்றச்சாட்டு



நா. தினுஷா

தற்போதைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அரசாங்கத்துக்குச் சார்பாகவும் பக்கச்சார்பாகவும் செயற்படுகிறார். வரலாற்றிலிருந்த சபாநாயகர்களில் மிகவும் பலவீனமான சபாநாயகர் இவரே. இவரின் செயற்பாடுகளுக்கு எதிராக பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்துக்கும் அனைத்து பாராளுமன்ற சங்கத்துக்கும் முறைப்பாடு செய்யவுள்ளோம். மேலும், இந்தப் பதவியிலிருந்து ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதை விட்டுவிட்டு, சபாநாயகர் பதவியிலிருந்து மஹிந்த யாப்பா அபேவர்தன உடனடியாக விலக வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் (04) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டை முழுமையாக முடக்கிவிட்டு அவசரமாக தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான விவாதம் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றிருந்தது. இந்த விவாதத்துக்கு இரண்டு நாட்களை வழங்குமாறு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நாங்கள் கோரியிருந்தோம். காலையிலிருந்து மாலை 7.30 மணி வரை விவாதத்தை முன்னெடுத்த நிலையிலும் நேரம் போதாத பட்சத்தில் அந்த நேரத்தை 9.30 மணி வரை நீடிப்பதாகவே அரசாங்கம் ஒப்புக்கொண்டிருந்தது.

9.30 மணி வரைக்கும் விவாதத்தை முன்னெடுப்பதாகவே சபாநாயகரும் பாராளுமன்ற பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்திருந்தனர். ஆனால். இறுதியில் சர்வாதிகாரமாகவும் பாராளுமன்ற ஜனநாயகத்தை மீறியும் 9.30 மணிக்கு இடம்பெறவேண்டிய வாக்கெடுப்பை 7.30 மணிக்கே நடத்தினார்.

எதிர்த் தரப்பினரை சிறிதளவும் பொருட்படுத்தாமல் சர்வாதிகாரப் போக்கில் மேலிடத்திலிருந்து வந்த உத்தரவை நடைமுறைப்படுத்தியுள்ளார். சபாநாயகர் பக்கச்சார்பாகவே செயற்படுகிறார். நானும் பல சபாநாயகர்களுடன் கடமையாற்றியுள்ளேன். அவர்கள் எவரும் ஒரு குழுவினருக்கோ அல்லது கட்சியினருக்கோ பக்கச்சார்பாக செயற்பட்டது கிடையாது. அவர்கள் பாராளுமன்றத்தில் சுயாதீனமாகவே செயற்பட வேண்டும். ஆனால், தற்போதுள்ள சபாநாயகர் வராற்றில் இல்லாதவாறு மாத்தறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராகவும் இருக்கிறார்.

இந்த சாபாநாயகர் அவரின் கதிரையில் இருந்து தீர்மானமொன்றை எடுக்கும் முன்னர், பிரதமர் மற்றும் சபை முதல்வர் ஆகியோரின் முகங்களைப் பார்த்துவிட்டே தீர்மானங்களை எடுக்கிறார். ஆகவே, சபாநாயகர் செய்த ஜனநாயக விரோத சம்பிரதாயபூர்வமற்ற செயற்பாட்டுக்கு எதிராக பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்துக்கும் அனைத்து பாராளுமன்ற சங்கத்துக்கும் முறைப்பாடு செய்யத் தீர்மானித்துள்ளோம். அதுமாத்திரமின்றி, சபாநாயகருக்கு எதிராக எடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் எடுப்போம்.

பேச்சுரிமையை பாராளுமன்றத்திலிருந்து இல்லாமலாக்க இவர் நடவடிக்கை எடுத்துள்ளார். எங்களின் தரப்பினர்களில் 6 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பேசுவதற்கான உரிமை கிடைக்கவில்லை.

மேலும். இந்த சபாநாயகர் தயவு செய்து அவரின் பதவியிலிருந்து விலக வேண்டும். அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் அறிவுரைகளுக்கமைய செயற்படுபவர் பக்கச்சார்பற்ற சுயாதீன சபாநாயகராக இருக்க முடியாது. இவர் வரலாற்றில் மிகவும் பலவீனமான சபாநாயகராவார் என்று குறிப்பிட்டார்.

# மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவராக தெஹிதெனிய நியமனம்



இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக நீதிபதி எல்.டி.பி. தெஹிதெனிய நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு ஆர்.ஏ.டி மெல் மாவத்தையில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் (04) அவர் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

மேலும், அவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்து சிநேக பூர்வமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

## தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் ஆனி மாதம் 21ஆம் நாள்
வியாழக்கிழமை

**மேஷம்** நீங்கள் எதிர்ப்பார்த்த உதவி உங்கள் நண்பர் மூலம் கிடைக்கும். போட்டிகளில் வெற்றி கிட்டும்.

**ரிஷபம்** முயற்சி செய்த தொழில் வாய்ப்புகள் அமையும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூத்தாடும்.

**மிதுனம்** தந்தை மூலம் கவலைகள் ஏற் படும்.பெரியோர்களின் கோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**கடகம்** பயணங்களைக் குறைத்துக் கொள்வது நல்லது. திடீர் கோபத்தால் மனதில் அமைதி இருக்காது.

**சிம்மம்** உறவினர்களுடன் விருந்துண்டு மகிழ்வீர்கள். மனைவியால் நன்மையும் லாபமும் உண்டு.

**கன்னி** பண வருவாய் திருப்திகரமாக அமையும். உடல் நோய்கள் தீரும்.

**துலாம்** தன்னைப்பற்றியே தாழ்வாக நினைத்து வேதனைப்படுவது, வீணான மனக்கவலை.

**விருச்சிகம்** எதையும் துணிவுடன் செய்ய மாட்டீர்கள். மற்றவர்களை நம்புவதற்கு முன்னர் இரண்டு முறை யோசியுங்கள்.

**தனுசு** நினைத்த காரியத்தில் வெற்றிவாகை சூடுவீர்கள். குடுபத்தில் மங்கள காரியங்கள் நடைபெறும்.

**மகரம்** பணம், பொருள் நட்டம் ஏற்படும் நாள். வீண் வாக்குவாதங்களால் தொல்லைகள்.

**கும்பம்** வீணான மனக் குழப்பங்கள் வேண்டாம். மற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம்.

**மீனம்** செலவுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளுங்கள்.தேவையற்ற பயணங்கள் வேண்டாம்.

**திதி** : திருதியை மு.ப.6.30 வரை பின் சதுர்த்தி (தேய்)

**நட்சத்திரம்** : அவிட்டம் பி.இ.12.25 வரை பின் சதயம்

**யோகம்** : சித்த யோகம்

**வார சூலை** : தெற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்லநேரம்** : மு.ப.10.56 - 11.56 மணி வரை

**ராகுகாலம்** : 1.26 - 2.56 மணி வரை

**எமகண்டம்** : 5.56- 7.26 மணி வரை

**குளிகை** : 8.56 - 10.26 மணி வரை

**சந்திராஷ்டமம்** : மிதுன-கடக ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்

**தனஅதிஷ்டம்** : ரோஹிணி, அத்தம், திருவோணம் (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** : சங்கடஹர சதுர்த்தி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739


வெளிவந்துவிட்டது!

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை
விசேட மாதிரி வினாத்தாள் தொகுப்பு




விலை
ரூ.850/=
மட்டுமே
பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!

பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

0761393805 / 0741684643
0777983308



வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/ Srimath Suwamiji/



பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2023 ஜூளை மாதம் 26 திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ. பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது

தங்க கடன் பிரிவு
வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் ஃபினான்ஸ்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூலை 06ஆம் திகதி, வியாழக்கிழமை

# பொருளாதார மேம்பாட்டுடன் மக்கள் நலனிலும் தேவை கவனம் !

கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருந்த இலங்கை, அந்த சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு, சுமுகமான நிலைமைக்கு திரும்பிக்கொண்டிருப்பதாக 'புளூம் பேர்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளதாக சுட்டிக்காட்டியிருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.

முதலீட்டுக்குச் சாதகமான சூழலை உருவாக்கும் வகையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் பட்சத்தில், இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்கள் தயாராக இருப்பதாகக் கூறியுள்ள அவர், நாட்டின் அபிவிருத்திக்கு தடையாக இருக்காமல், அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வருமாறு கேட்டுக்கொண்டுள்ளார். பொருளாதார விவகாரம் குறித்து வெளிவிவகார அமைச்சர் பேசுவதா என்று யோசித்தாலும் இப்போதுள்ள இலங்கையை முன்னேற்ற நிதியமைச்சுடன் இணைந்து செயற்படவேண்டிய தேவை வெளிவிவகார அமைச்சருக்குள்ளது.

கொரோனா வைரஸ் பாதிப்பு 2019இல் தொடங்கி இலங்கை உட்பட உலக அளவில் பாதிப்பை ஏற்படுத்தியது. அந்த நோய்த்தொற்று பாதிப்புக்குப் பிந்தைய நாட்களில், பெரும் வல்லரசான அமெரிக்கா உள்பட அனைத்து நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டது. பொருளாதாரத்தில் உலக அளவில் மிகவும் மோசமாக இருப்பதாகக் கருதப்படும் இலங்கையும் இதற்கு விதிவிலக்கின்றி கடும் நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளது.

உயர்ந்து வரும் பணவீக்கம் என்ற அசுரனின் தாக்குதல்தான் இதற்கு முக்கியமான காரணமாகும். பணவீக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கு உலகளாவிய மத்திய வங்கிகள் வட்டி விகிதங்களை அடுத்தடுத்து உயர்த்தின. இதனால், மக்கள் கடும் இறுக்கத்திற்கு மத்தியில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் விதமாக மத்திய வங்கிகள், வங்கிகளுக்கு வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி விகிதத்தை உயர்த்துகிறது. இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியை பெரிதும் பாதிக்கிறது. நடந்துகொண்டிருக்கும் உலகளாவிய இறுக்கமான பணவியல் மரதன் ஓட்டத்தில், பாதி தொலைவைத்தான் நாம் கடந்துள்ளோம். இன்னும் இலக்கை அடையவில்லை.

பணவீக்கம் தணிந்து, கொள்கை விகிதங்கள் உச்சத்தை எட்டியபோதிலும், மத்திய வங்கிகள், விகித அதிகரிப்புக்குத் திரும்பியுள்ளன என்பதுதான் உண்மை. கடந்த வாரம், இங்கிலாந்து வங்கி, சந்தைகளை ஆச்சரியத்துக்குட்படுத்தியது. எதிர்பார்த்ததை விட 0.5 சதவீதம் வட்டி உயர்வை அந்த வங்கி அறிவித்தது.

அதைத் தொடர்ந்து நோர்வே, துருக்கி ஆகிய நாடுகளின் மத்திய வங்கிகளும் தங்களின் வட்டி விகிதத்தை உயர்த்தின. இதில் துருக்கி மத்திய வங்கி 6.5 சதவீதம் உயர்வுடன் ஒரு படி மேலே சென்றது. இது கிட்டத்தட்ட அதன் நாணயத்தை முடக்கியது. சில நாட்களுக்கு முன்பு, ஐரோப்பிய மத்திய வங்கியும் ஜூலையில் மேலும் அதிகரிப்பு இருக்கும் என மறைமுகமாகத் தெரிவித்தது.

இந்த நிலையில், அனைவருக்கும் அதிர்ச்சியளிக்கும் வகையில், அமெரிக்க மத்திய வங்கியான பெடரல் ரிசர்வின் தலைவர் ஜெரோம் பவல், வரவிருக்கும் மாதங்களில் கூடுதல் விகித உயர்வுகள் தேவை என்பதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளார். இது உலகளாவிய நிதி மற்றும் பங்குச்சந்தைகளில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தி, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மோசமாக்கியுள்ளது.

இதற்கிடையே, ஐரோப்பாவில், பொருளாதாரக் கண்ணோட்டத்தைப் பற்றிய கவலைகள் சிக்கலை மேலும் அதிகமாக்கியுள்ளது. இந்த நிலையில், சீனாவின் மத்திய வங்கி பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க வட்டி விகிதங்களைக் குறைத்தாலும், விகிதக் குறைப்புகளின் அளவு மிகவும் சிறியதாகவே இருந்தது. இது முதலீட்டாளர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. மொத்தத்தில், மத்திய வங்கிகளின் நடவடிக்கை கடந்த நாட்களில் உலகளாவிய அளவில் நிதி மற்றும் பங்குச்சந்தைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இதற்கிடையே, 2023-2024ஆம் ஆண்டு, உலகின் மிகப் பெரிய பொருளாதார மந்தநிலை ஆண்டாக இருக்கும் என பல மதிப்பீடுகள் கூறுகின்றன. எந்தவொரு நிதி சார்ந்த கொந்தளிப்பான, அதிரடியான முடிவுகள் உலகின் பிற பகுதிகளுக்கும் ஆபத்தானதாகவே அமையும்.

அமெரிக்க மத்திய வங்கியின் வட்டி விகித வழிகாட்டுதல், ஜூலை உயர்வு 75 புள்ளிகள் அல்லது 50 புள்ளிகளாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அடுத்து வரும் நாட்களில் நெருக்கடி இன்னும் அதிகமாவதற்கே வாய்ப்புகள் உள்ளதாக வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

வட்டி விகித உயர்வு என்பது மிகவும் அதீதமாக இருக்கக் கூடாது. பொருளாதார வளர்ச்சியை மீட்டெடுப்பதற்கான கூர்மையானஆயுதமாக இருக்க வேண்டும். பணவீக்கத்துக்கு எதிரான இந்தப் போராட்டம், ஒருங்கிணைந்த மற்றும் ஆக்ரோஷமான கொள்கை முடிவுகள் வெற்றியைத் தருமா என்பது கேள்வியல்ல. ஆனால், அது மேலும் சிக்கலை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதே கவலை.

உதாரணமாக, அமெரிக்க மத்திய வங்கியின் அளவுக்கதிகமான வட்டி விகித உயர்வுகள், ஆங்கிலத்தில் 'ரிஸஷன்' என்று சொல்லப்படும் பொருளாதார மந்தநிலைக்கான அறிகுறியாக இருக்கும் என்று அஞ்சப்படுகிறது. எந்தவொரு மத்திய வங்கியும் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி பாதிப்பு சாத்தியத்தை முன்கூட்டியே உறுதிப்படுத்தத் தவறிவிட்டது.

மேலும், இப்போது ஆரம்பித்திருக்கும் பருவலகால மழைவீழ்ச்சியால் விவசாய உற்பத்திகள் குறைவதற்கான வாய்ப்பை நிராகரிப்பதற்கில்லை. அது போலவே, காய்கறிகளின் விலை உயர்ந்து, உணவுப் பணவீக்க அபாயங்கள் கவலையளிக்கும் விடயமாக உள்ளன. மட்டக்களப்பில் பச்சை மிளகாய் மற்றும் இஞ்சிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், ஒரு கிலோ பச்சை மிளகாய் 1300 ரூபாவாகவும், ஒரு கிலோ இஞ்சி 3 ஆயிரம் ரூபாகவும், ஒரு கிலோ கரட் 500 ரூபாவாகவும் உயர்ந்துள்ளதாக மட்டக்களப்பு பொதுச்சந்தை மரக்கறி விற்பனையாளர்கள் தெரிவித்த செய்திகளை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். பருவமழை மற்றும் பயிர் உற்பத்தி ஆகியவை மிக முக்கியமானவை. ஏனெனில், அவை கிராமப்புற நுகர்வு மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இது வளர்ச்சிக்கு முக்கியமானது.

பொருளாதார முன்னேற்றம் குறித்து அமைச்சர்மார் பேசுவது நல்லது. அதற்கு முன்னர் பணவீக்கம் குறித்து கவனம் செலுத்துவது கட்டாயமாகின்றது. உள்நாட்டுக் கடன்களை மட்டும் மறுசீரமைக்கும் அரசாங்கம் மக்கள் எதிர்நோக்கும் தனிப்பட்ட கடன்களில் கவனம் செலுத்தவேண்டும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# பூமியை உயிர்ப்போடு வைப்போம்

*முனைவர் என். மாதவன்*



ஒருநாள் கிராமம் ஒன்றின் வழியாகப் பயணித்தேன். சிறப்பு நிகழ்வு ஒன்று நடைபெறும் வீட்டில் நாற்காலி, மேசை போட்டு உணவு பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தது. பக்கத்துத் தெருவிலிருந்து பெண்மணி ஒருவர் கையில் பிளாஸ்டிக் வாழையிலையை எடுத்துக்கொண்டு அந்த வீட்டிற்குள் உணவருந்த நுழைந்தார்.

அந்த தெருவிலேயே பல வாழைமரங்கள் இருந்தன. எனவே, அந்தப் பெண்மணி செய்த செயலை என்னால் ஏற்க முடியவில்லை. ஒருவேளை அந்த வீட்டில் உணவருந்திய அனைவரும் இப்படித்தான் பிளாஸ்டிக் வாழையிலையில் உணவருந்தினார்களோ என்ற எண்ணம் வந்தது.

நகரங்களுக்கு நிகராக கேளிக்கைகள், விருந்து நிகழ்வுகள் கிராமப்புறங்களிலும் நடைபெறத் தொடங்கியுள்ளன. இவற்றை, கிராமப்புறங்களின் இயல்பை முற்றிலும் மரத்துப் போகச் செய்யும் நுகர்வு கலாசாரத்தின் நீட்சியாகத்தான் பார்க்க முடிகிறது.

இந்த ஒரு நிகழ்வு மட்டுமில்லை. மனிதர்கள் உணவு உண்பதற்கும் பொலித்தீன் பயன்பாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கவே செய்கிறது. எத்தனை கட்டுப்பாடுகள் விதித்தாலும் அவை அத்தனையையும் மீறி உணவகங்களில் பொலித்தீன் பயன்பாடு நீடிக்கவே செய்கிறது. அவ்வாறு பொலித்தீனில் பொதி செய்து கொடுக்கும் உணவுகளை வாங்கிக்கொண்டு சுற்றுலா செல்வோரும் உள்ளனர்.

அவர்கள் நெடுஞ்சாலையோரங்களில் மரங்களில் நிழலில் உணவருந்துவர். அவர்களில் பலரும் உணவருந்திய இடங்களில் பொறுப்பற்ற முறையில் பொலித்தீன், பிளாஸ்டிக் கோப்பைகளை வீசிவிட்டுச் செல்வது வாடிக்கையாகி வருகிறது.

மதுக் கடைகளை ஒட்டிய இடங்களிலோ கேட்கவே வேண்டாம். ஏராளமான பொலித்தீன் டம்ளர்களும், பொலித்தீன் பைகளும் மண்ணில் வீசப்படுகின்றன. ஒன்று மட்டும் உண்மை. பொலித்தீன் தயாரிப்பை அறவே நிறுத்தாமல் இவ்வாறு வீசப்படுவதை தவிர்க்கவே இயலாது.

குழந்தைகள் சாப்பிடும் பிஸ்கட், இனிப்புவகைகள், பீட்சா, பர்கர் போன்ற உணவுப் பொருட்களின் பொதிகளுக்காக பயன்படுத்தப்படும் பொலித்தீன், காகிதம், அட்டை போன்ற பொருட்களைப் பார்க்கும்போது சூழல் அக்கறை உள்ள யாராலும் வருத்தப்படாமல் இருக்க இயலாது.

வாழ்க்கை ஓட்டத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மணித்துளியும் முக்கியத்துவம் வாய்ந்ததே. பலரும் உணவாக இருந்தாலும் உடையாக இருந்தாலும் விரைவாகவும் உடனடித் தயாரிப்போடும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அந்த எதிர்ப்பார்ப்பை நிறைவு செய்ய நினைக்கும் வணிக நிறுவனங்கள் இதுபோன்ற வழிவகைகளை மேற்கொள்கின்றன.

போட்டி காரணமாக நிறுவனங்கள் இவ்வாறு பொதிகளில் கவர்ச்சியைக் கூட்ட முயல்கின்றன. விரைவாக விற்பனை செய்து இலாபமீட்டும் வாய்ப்பை எவ்வாறு வணிக நிறுவனங்கள் விட்டுக்கொடுக்க இயலும் என்று தோன்றும். ஆனால், மக்கள்தொகை மிகுந்த நாடுகளில் பொலித்தீன், காகிதம், அட்டை போன்றவற்றின் பயன்பாடு இயற்கை வளங்களின் இருப்பை நிர்ணயிப்பதாக உள்ளது.

பொலித்தீன் பொருட்களை உபயோகித்துவிட்டு வீசி எறிவதால், அவை பலநூறு ஆண்டுகள் மக்காமல் இருந்து மண்ணை மாசுபடுத்துகின்றன. அது மட்டுமல்ல, நிலத்தடி நீர் சேகரிப்புக்கும் தடையாக இருக்கின்றன. வசதி படைத்தவர்கள் பயன்படுத்தி வீசி எறியும் பொலித்தீனால் ஏற்படும் சுகாதாரக் கேட்டால் பாதிக்கப்படுவோர் ஏழை எளிய மக்களாகவே இருப்பர்.

எந்த ஒரு செயற்பாட்டிலும் துணை வினையாக கழிவு உருவாவது தவிர்க்க இயலாததே. சமையல் செய்ய காய்கறிகளை நறுக்குகிறோம். அதன் தோல் போன்ற கழிவுகளை வெளியேற்றித்தானே ஆகவேண்டும். இதுபோலவே பழங்களின் தோலும் கழிவாக வெளியேற்றப்படவேண்டியதே.

இதனை மனதில் கொண்டே, மக்கும் பொருட்கள், மக்காப் பொருட்கள் என குப்பைகளைத் தனித்தனியே பிரித்து மேலாண்மை செய்யும் திட்டத்தை அரசு செயற்படுத்தி வருகிறது. ஆனால், கழிவு மேலாண்மை என்று அறிவித்துவிட்டு, கட்டுக்கடங்காமல் கழிவு உருவாக்கத்தை அனுமதிப்பது நியாயமான செயலாக இருக்காது. கழிவு மேலாண்மையுடன், கழிவு உற்பத்தியைக் குறைக்கவும் திட்டங்கள் தீட்டப்படவேண்டும்.

முதற்கட்டமாக பொலித்தீன் பயன்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். ஆயத்த ஆடை விற்பனை செய்யும் நிறுவனங்கள் ஆடைகளோடு வரும் பெக்கிங் பொருட்களை வாடிக்கையாளர்களிடம் திரும்பப் பெற்று அவற்றை மறுபயன்பாட்டிற்கு உட்படுத்தலாம். அவ்வாறு பெக்கிங் பொருட்களை திரும்ப அளிப்போருக்கு அடுத்தடுத்த விற்பனைகளில் தள்ளுபடி அளித்து ஊக்குவிக்கலாம்.

உணவகங்கள் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கூடுதலாகப் பெற்றுக்கொண்டு எளிதில் மக்கும் பொருட்களான தென்னை, இலை போன்றவற்றில் மட்டுமே பொதி செய்து கொடுக்க வேண்டுமென வர்த்தமானி வெளியிடலாம். பிஸ்கட், இனிப்புவகை போன்றவற்றைத் தயாரிக்கும் பெருநிறுவனங்கள் பல்வேறு இடங்களிலும் கிளைகளை நிறுவி அக்கிளைகளில் குறைந்தபட்ச பெக்கிங் பொருட்களோடு விற்பனை செய்யலாம்.

ஒவ்வொரு வீட்டிலுள்ளோரிடமும் அவர்கள் அகற்றும் கழிவுகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். காய்கறி, மளிகை போன்ற பொருட்களை துணிப்பையை எடுத்துச் சென்று வாங்கிவரலாம். துணிப்பை உபயோகிக்கும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளைக் கண்டறிந்து பள்ளிகளின் மாணவர் பேரவை கூட்டங்களிலோ நகர்வாழ் மக்கள் சங்கங்களிலோ அவர்களைப் பாராட்டலாம்.

மனிதர்களின் செயற்பாட்டால் பூமி வாழ அருகதையற்ற இடமாகிக்கொண்டு வருகிறது. மக்கள் எழுத்தறிவு விகிதம் குறைவாக இருந்த நாட்களிலேயே சுற்றுச்சூழல் குறித்த அக்கறையோடு வாழ்ந்த பெருமைக்குரிய சமூகம் நமது சமூகம். இன்றைய எழுத்தறிவு விகித அதிகரிப்பும் நாகரிக வேட்கையும் பூமியை உயிர்க்கோளமாகத் தொடர வழிவகை காணவேண்டும். பூமி உயிர்ப்போடிருக்கும் வரைதான் உயிரினங்களின் வாழ்வுக்கு உத்தரவாதம் உண்டு.

*(நன்றி - தினமணி)*

# நடமாடும் கலைக்களஞ்சியமாக திகழ்ந்த பேராசிரியர் சிவத்தம்பி



பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி காலமாகி இன்றுடன் 12 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. மே 10, 1932ஆம் ஆண்டி பிறந்த அவர் ஜூலை 6, 2011இல் இயற்கை எய்தினார். சிவத்தம்பி ஒரு முக்கிய தமிழ் இலக்கிய விமர்சகர், திறனாய்வாளர் மற்றும் சமூக சிந்தனையாளர் ஆவார்.

**கல்வியும் கல்விப்பணியும்**

யாழ்ப்பாணம் கரவெட்டி மேற்கில் பிறந்த சிவத்தம்பி ஆரம்பக் கல்வியை கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் கற்றார். பின்னர் இடைநிலைக் கல்வியை கொழும்பு சாஹிரா கல்லூரியில் கற்றார். ஆரம்பத்தில் 1956 முதல் 1961 வரை கொழும்பு சாஹிரா கல்லூரியில் ஆசிரியராகவும், 1961 முதல் 1965 வரை இலங்கைப் பாராளுமன்ற சமகால மொழிபெயர்ப்பாளராகவும் பணிபுரிந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளமாணிப் பட்டத்தையும், பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் பயின்று முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். ஐக்கிய இராச்சியத்திலுள்ள பர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் ஆய்வுப் படிப்பை மேற்கொண்டு முனைவர் (Ph.D) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

**பல்கலைக்கழகப் பணி**

1965 முதல் 1970 வரை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகவும் 1970 முதல் 1975 வரை விரிவுரையாளராகவும் 1976 முதல் இணைப் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

1978ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் 17 ஆண்டுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். பின்னர் மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அழைப்பின் பேரில் இரண்டு ஆண்டுகள் அங்கு பணியாற்றினார். தொடர்ந்து தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வருகைப் பேராசிரியராகவும் ஓராண்டு வரை பணி புரிந்தார். இந்தியா, இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற பல்வேறு நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களிலும் வருகைப் பேராசிரியராகவும் இருந்துள்ளார்.

**கலைப் பங்களிப்பு**

பல்கலைக்கழகக் காலத்தில் மேடை நாடகங்களில் நடித்ததோடு, பின்னர் வானொலி நாடகங்களிலும் நடித்துப் புகழ் பெற்றவர். இலங்கையர்கோன் எழுதிய 'விதானையார் வீட்டில்' தொடர் நாடகத்தில் இவரே முக்கிய கதாபாத்திரத்தில் நடித்தார்.

**ஆக்கங்கள்**

ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட ஆக்கங்களை பல்வேறு துறைகளிலும், ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் உருவாக்கியவர். இவர் முதன்மையாகப் பயின்ற துறைகளுக்குப் புறம்பாகவும் பல துறைகளில் இவர் ஆர்வம் கொண்டிருந்தார். இவரது ஆர்வம், தமிழ், சமயம், சமூகவியல், மானிடவியல், அரசியல், வரலாறு, கவின் கலைகள் எனப் பல்வேறு துறைகளையும் தழுவியிருந்தது. மார்க்சியச் சிந்தனைப் போக்குடைய இவர் யாழ்ப்பாண சமுதாயத்தின் பல்வேறு குறைபாடுகளையும் கடுமையாக விமர்சித்தார்.

**மறைவு**

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி தனது 79ஆவது வயதில் 2011, ஜூலை மாதம் 6ஆம் திகதி புதன்கிழமை இரவு 8 .15 மணிக்கு கொழும்பு, தெஹிவளையில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் காலமானார்.

தமிழக அரசின் திரு.வி.க.விருது அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்ட ஈழத்தமிழ் அறிஞர் பேராசிரியர் கா.சிவத்தம்பி என்ற ஆளுமையின் சில ஊற்றுகளைப் பதிவுசெய்யும் வகையில், 'கரவையூற்று' எனும் தலைப்பில் யாழ்ப்பாணம் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கொழும்புக் கிளை நூல் ஒன்றை வெளியிட்டது. 'கரவையூற்று' நூலின் தொகுப்பாசிரியர் வீ.ஏ.திருஞானசுந்தரம் என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் சிவத்தம்பியின் மாணவர்களும் அவரின் நண்பர்களும் இன்றும் அவரை நினைவுகூருவதன் மூலம் மறைந்தும் அவர் மக்கள் மனங்களில் வாழ்கிறார் என்பதையே காட்டுகிறது.

## இன்றைய நாளில்...

- 1411 – தனது மூன்றாவது செல்வம் தேடும் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய மிங் சீனத் தளபதி செங் ஹே, தனது பயணத்தின்போது இலங்கையில் மிங் - கோட்டைப் போரில் கைதுசெய்த இலங்கை மன்னன் அழகக்கோனை யொங்கில் பேரரசரிடம் ஒப்படைத்தார்.
- 1885 – பிரெஞ்சு வேதியியலாளர் லூயி பாஸ்ச்சர், தான் கண்டுபிடித்த தடுப்பூசி மருந்தை வெறிநாய்க் கடியினால் நோய்வாய்ப்பட்ட 9 வயது யோசப் மைசிட்டர் என்ற சிறுவனிடம் வெற்றிகரமாகப் பரிசோதனை செய்தார்.
- 1935 – சிங்கப்பூரின் தமிழ் நாளிதழன 'தமிழ் முரசு' ஆரம்பிக்கப்பட்டது.
- 1947 – சோவியத் ஒன்றியம் ஏகே-47 துப்பாக்கிகளைத் தயாரிக்க ஆரம்பித்தது.
- 1956 – சிங்களம் இலங்கையின் அதிகாரபூர்வ மொழியானது.
- 1962 – இலங்கைப் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவைக் கொலைசெய்த குற்றத்திற்காக சோமாராம தேரர் என்ற பௌத்த துறவி தூக்கிலிடப்பட்டார்.

## நக்கல் நமசிவாயம்

*ஜனாதிபதியாக வருவதற்கு ஆதரவு தருவதா சஜித்துக்கு சொல்லியிருக்கிறார் ரணில்... பதவிய இப்போவே கொடுக்கலாமே? ஏன் தேர்தல் வரைக்கும் இருப்பானேன்...*



# மண்டைதீவுக் காணிகளை கடற்படைக்கு சுவீகரிக்கும் நடவடிக்கையை எதிர்ப்போம்!

## சிறீதரன் எம்.பி. அழைப்பு

யாழ்ப்பாணம், வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவு கிழக்கில் 29 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை வெலுசுமன கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் நோக்கில் எதிர்வரும் 12 ஆம் திகதி அளவீட்டுப் பணிகளை ஆரம்பிக்கப்போவதாக நில அளவைத் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.



அதற்கமைய இவ்வளவீட்டுப் பணிகளை தடுத்து நிறுத்துவதற்காக மக்கள் பிரதிநிதிகள், காணி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அன்றைய தினம் (12) காலை 7.30 மணியளவில் மண்டைதீவு கிழக்கில் நடைபெறவுள்ள எதிர்ப்புப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

# முக்கிய ஆவணங்களுடன் ஹட்டனில் ஒருவர் கைது

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

வீடொன்றிலிருந்து தேசிய அடையாள அட்டைகள் உட்பட பல முக்கிய ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் பொலிஸார் நேற்று (05) மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே ஹட்டன் வில்பிரட் நகரப்பகுதி குடியிருப்பொன்றிலிருந்து மேற்குறித்த ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹட்டன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரஞ்சித் விஜேசேகர தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட இத்திடீர் சோதனை நடவடிக்கையின்போதே 38 தேசிய அடையாள அட்டைகள், பிறப்புச்சான்றிதழ்கள், கைரேகை வைக்கப்பட்ட வெற்று கடதாசிகள், கையொப்பமிட்டப்பட்ட வெற்றுக் காகிதங்கள்,ஏ.டி.எம். அட்டை என பல ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

தேசிய அடையாள அட்டைகள் காணாமல்போவதாக ஹட்டன் பொலிஸ் நிலையத்துக்கு அண்மைக்காலமாக முறைப்பாடுகள் கிடைத்துவந்தன. இந்நிலையில், ஹட்டன் மாவட்ட நீதவான் நீதிமன்றின் உத்தரவைப் பெற்ற ஹட்டன் பொலிஸார் குறித்த வீடொன்றை முற்றுகையிட்டு சோதனைக்குட்படுத்தினர்.



இதன்போதே மேற்படி ஆவணங்கள் மீட்கப்பட்டதாகவும் கைதுசெய்யப்பட்ட 58 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான குறித்த சந்தேக நபர் சட்ட விரோதமாக வட்டிக்கு பணம் வழங்கி வருவதாகவும் அவ்வாறு வட்டிக்கு பணம் பெறுபவர்களிடமிருந்தே மேற்படி ஆவணங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஆவணங்களைக் கொண்டு வேறு சட்ட விரோத செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளனவா என விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார் சந்தேக நபரை ஹட்டன் மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# தீக்குளிக்க முயற்சித்த இரு பிள்ளைகளின் தாய்

## காப்பாற்றிய வவுனியா பொலிஸார்

வவுனியாவில் இராணுவத் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக தீக்குளிக்க முயன்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரை வவுனியா பொலிஸார் காப்பாற்றியுள்ளனர்.

வவுனியா ஏ9 வீதியில் அமைந்துள்ள வன்னி இராணுவத் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக நேற்று (05) காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, குருநாகல், வரக்காபொல பகுதியில் வசித்துவரும் 34வயதுடைய குறித்த பெண்ணுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். இந்நிலையில், கணவன்-மனைவிக்கிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இரண்டு பிள்ளைகளையும் கணவர் அழைத்துச்சென்றுள்ளதுடன் இருவரும் கடந்த சில மாதங்களாகப் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், குறித்த இரண்டு பிள்ளைகளின் தாயாருக்கும் வவுனியா இராணுவத் தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் குடும்பஸ்தரான இராணுவ வீரருக்குமிடையே தொடர்பு ஏற்பட்டுள்ளது. எனினும், சில வாரங்களாக குறித்த இராணுவ வீரருடைய தொலைபேசி துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் விரக்தியடைந்த குறித்த குடும்பப் பெண் அவரைத் தேடி வவுனியா இராணுவத் தலைமை அலுவலகத்துக்குச் சென்றுள்ளார். எனினும், குறித்த இராணுவவீரரைச் சந்திக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் அப்பெண் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக தீக்குளிக்க முயற்சித்தபோது வவுனியா பொலிஸாரினால் காப்பாற்றப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# ஹெரோயின் வைத்திருந்த பெண் உட்பட 4 பேர் கைது

மொனராகலை பொலிஸ் பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மொனராகலை பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயின் வைத்திருந்த பெண் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிணங்க கும்புக்கன 14ஆம் கட்டைப் பகுதியில் 29 வயதுடைய ஒருவரும் மொனராகலை, மஹாநாமா தேசிய பாடசாலைக்கருகில் மொரட்டுமுல்லையைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரொருவரும் மொனராகலை சிறிகல ரொக்ஹில் சுற்றுலா விடுதிக்கருகில் மொரட்டுவ பிரதேசத்தில் வசிக்கும் ஒருவரும் சிறிகல துருளிய சுற்றுலா விடுதிக்கருகில் கட்டுபெத்த பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய பெண்ணொருவருமாக நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 25 கிராம் 969 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

மொனராகலை பொலிஸ் பிராந்தியக் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மேற்படி சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

# கஞ்சா,கசிப்பு வைத்திருந்த ஒருவர் பொலிஸாரால் கைது

மொனராகலை பிராந்திய போதை ஒழிப்புப் பிரிவினர் ஒக்கம்பிட்டிய வீதி 01ஆம் கட்டையில் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 300 கிராம் உலர் கஞ்சா மற்றும் 18,750 மில்லி லீற்றர் கசிப்பு என்பனவற்றை வைத்திருந்த நபரொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக குறித்த தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் புத்தல, ஒக்கம்பிட்டியவில் வசிக்கும் 40 வயதுடையவராவார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# வான் - மோட்டார் சைக்கிள் மோதுண்டு இளைஞன் உயிரிழப்பு

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா ஏ9 வீதி அரசாங்க விதை உற்பத்திப் பண்ணைக்கருகில் நேற்று (05) அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற கனரக வாகனத்தை மோட்டார் சைக்கிள் முந்திச்செல்ல முற்பட்டவேளை எதிர்த்திசையில் வவுனியா நோக்கிச் சென்ற வானுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, குருமண்காடு பகுதியைச் சேர்ந்த சிவக்குமார் ருபீன்ஸ்ராஜ் (24வயது) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மூன்று வாகனங்களையும் கைப்பற்றியுள்ள வவுனியா பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அலகொலமட பகுதியில் காட்டுயானை உயிரிழப்பு

## துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வனவிலங்கு அதிகாரி டெல்ஷான் தகவல்

ஹல்துமுல்ல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அலகொலமட பகுதியில் யானை ஒன்று நேற்றுமுன்தினம் செவாய்க்கிழமை பிற்பகல் உயிரிழந்துள்ளதாக ஹல்துமுல்ல வனஜீவராசிகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யானை ஒன்று இருப்பதாக கொஸ்லந்த பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் ஹல்துமுல்ல வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஹல்துமுல்ல வனஜீவராசிகள் அலுவலகத்தின் கால்நடை வைத்திய அதிகாரியுடன் உடவலவ வனவிலங்கு தள காவலர் டி.என்.கே. கொடித்துவக்கு, வனவிலங்கு அதிகாரி டெல்ஷான் பிரியதர்ஷன ஆகியோர் இணைந்து காயமடைந்த யானைக்குத் தேவையான சிகிச்சைகளை நேற்றுமுன்தினம் காலை வழங்கத் தொடங்கினர். எனினும், சிகிச்சை பலனின்றி குறித்த காட்டு யானை உயிரிழந்துள்ளது.சுமார் 30 வயது மதிக்கத்தக்க இந்தக் காட்டு யானையின் பின் காலில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வனவிலங்கு அதிகாரி டெல்ஷான் தெரிவித்தார்.




**01. சிரேஷ்ட ஆலோசனை சட்டத்தரணிகளுக்கான சிறப்புக் கௌரவித்தல் சட்டமூலம்**

சட்டத்துறையில் சிரேஷ்ட ஆலோசனை சட்டத்தரணிகளால் பேணிப் பாதுகாக்கின்ற உயரிய தரநியமங்களுடன் கூடிய சிறப்புகளைப் பாராட்டுவதற்காக புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு 30.01.2023 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது. அதற்கமைய, சிரேஷ்ட ஆலோசனை சட்டத்தரணிகளுக்கான கௌரவித்தல் சட்டமூலம் சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. குடியியல் நடவடிக்கைமுறை சட்டக் கோவைக்கான திருத்தங்கள் (101 ஆம் அத்தியாயம்) (205 ஆம் பிரிவு)**

குடியியல் நடவடிக்கைமுறை சட்டக் கோவைக்கான திருத்தங்கள் சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிட்டு பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக 10.10.2022 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பின்னர், நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் குடியியல் சட்ட மறுசீரமைப்பு உபகுழுவால் குறித்த சட்டமூலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேலும் சில திருத்தங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. குறித்த திருத்தங்களையும் உள்ளடக்கியவாறு சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள இறுதிச் சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. நெதர்லாந்து நிதியுதவியின் கீழ் வடமாகாணத்தில் சுகாதார சேவைகளைப் பலப்படுத்துதல்**

“வடமாகாணத்தில் சுகாதார சேவைகளைப் பலப்படுத்துதல் கருத்திட்டத்திற்கான” கருத்திட்ட செலவின் 75 வீதமான நிதி வசதியளிப்புகளுக்கு 45 மில்லியன் யூரோ கடனைப் பெற்றுக்கொள்வதற்காக நெதர்லாந்தின் ING Bank N.V உடன் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய 25 வீதமான கருத்திட்ட செலவு நெதர்லாந்து அரசின் Invest International Public Programmes B.V இன் மூலம் நன்கொடையாக நிதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது இக்கருத்திட்டத்தின் 92 வீதமான பௌதீக முன்னேற்றம் அடையப் பெற்றுள்ளது. இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு கடன் தொகையில் 10 வீதத்தைக் குறைத்து, வழங்கப்படுகின்ற நன்கொடையை 35 வீதமாக அதிகரிப்பதற்கு நெதர்லாந்து அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்குரிய திருத்தங்களை உள்வாங்கி நெதர்லாந்து அரசின் Invest International Public Programme B.V மற்றும் நெதர்லாந்தின் ING Bank N.V உடன் உடன்பாட்டு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கமைய, குறித்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான Mv. Ceylon Breeze மற்றும் Mv. Ceylon Princess ஆகிய கப்பல்களை உலர் கப்பல் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தல்**

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான காலப்பகுதியில் இவ்விரண்டு கப்பல்களையும் சர்வதேச ரீதியான வாடகைச் சேவையில் அமர்த்துவதற்காக குத்தகை அடிப்படையில் கப்பல்களை வாடகைக்கு அமர்த்துபவர்கள் அல்லது வர்த்தக முகாமையாளர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்கான போட்டி விலைமுறிகள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 09 விலைமுறிகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அவற்றில் 06 விலைமுறிகள் வாடகை அடிப்படையிலும் 03 விலைமுறிகள் வர்த்தக முகாமைத்துவத்தின் கீழும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய நிதி ரீதியாக மிகவும் கவர்ச்சிகரமான சிறந்த விலைக்கோரலைச் சமர்ப்பித்துள்ள விலைமனுதாரரான M/s Coral Energy DMCC இற்கு மேற்குறிப்பிட்ட கப்பல்கள் இரண்டையும் வாடகைக்கு அமர்த்துவதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

05. 2023/24 மற்றும் 2024/5 காலப்பகுதிக்கான கப்பலிலிருந்து லக்விஜய மின்னுற்பத்தி நிலைய இறங்குதுறைக்கு நிலக்கரிப் போக்குவரத்துக்குப் படகுச் (தெப்பம்) சேவைக்கான இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் மற்றும் இந்தியாவின் M/s Shreeji Shipping இற்குமிடையிலான ஒப்பந்தத்தை நீடித்தல்.

புத்தளம் துறைமுகத்தில் நங்கூரமிடப்படும் கப்பல்களிலிருந்து லக்விஜய நிலக்கரி மின்னுற்பத்தி நிலைய இறங்குதுறைக்கு 2021/22 மற்றும் 2022/23 ஆம் ஆண்டுகளுக்கான நிலக்கரிப் போக்குவரத்துப் படகுச் சேவை ஒப்பந்தம் இந்தியாவின் M/s Shreeji Shipping இற்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் செப்டெம்பர் மாதம் தொடக்கம் நிலக்கரி இறக்கும் பணிகளை தடையின்றி மேற்கொண்டு செல்வதற்கு இயலுமாகும் வகையில் படகுச் (தெப்பம்) சேவையை ஈடுபடுத்துவதற்காக M/s Shreeji Shipping மற்றும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

விசேட வர்த்தகப் பண்டவரியை விதிப்பதன் மூலம் கோதுமை மாவு இறக்குமதிக்கான அனுமதிப்பத்திர முறைமையை மீண்டும் தாபிப்பதற்காக 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் 2023 ஜூன் 14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. ஜப்பான் அரசின் உதவியுடன் உத்தேச இலகு புகையிரத போக்குவரத்துக் (LRT) கருத்திட்டம்**

முன்மொழியப்பட்டுள்ள இலகு புகையிரத போக்குவரத்துக் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு இயலுமாகும் வகையில் கொழும்பிலுள்ள ஜப்பான் இராஜதந்திர தூதுக்குழுவுடன் கலந்துரையாடலை மீண்டும் முனைவுபடுத்தி குறித்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்குப் பொருத்தமான கால அட்டவணையைத் தயாரிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.



# வவுனியா ஊடக அமையம் - அமெரிக்க நிறுவனத்துக்கு இடையில் வலுவூட்டல் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்து



வவுனியா நிருபர்

வவுனியா ஊடக அமையத்துக்கும் அமெரிக்க நிறுவனத்துக்கும் (USAID) இடையில் வலுவூட்டல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைசாத்திடப்பட்டுள்ளது.

வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியொன்றில் குறித்த ஒப்பந்தம் மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, உதவி மாவட்ட செயலாளர் திருமதி சபர்ஜா முகுந்தன் மற்றும் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், அமெரிக்க நிறுவன திட்டப் பணிப்பாளர் ஜெ.கார்த்திகேயன் முன்னிலையில் நேற்று முன்தினம் (04) கைச்சாத்திடப்பட்டது.

அமெரிக்காவைத் தலைமையகமாகக்கொண்டு இயங்கும் குறித்த நிறுவனம் (USAID) பொருளாதார ரீதியாக பாதிப்படைந்த மற்றும் போரால் பாதிப்படைந்த நாடுகளுக்கு தனது உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றது. அதன் ஒரு கட்டமாக வவுனியா ஊடக அமையத்தின் கோரிக்கைக்கமைவாக வவுனியா ஊடகவியலாளர்களை வலுப்படுத்தல், ஊடக அமையத்தை மாவட்ட மட்டத்தில் வலுவூட்டல், மாவட்ட மக்களின் காணிப் பிரச்சினை உள்ளிட்டவற்றை தீர்வு நோக்கி நகர்த்துதல், தென்பகுதி ஊடகவியலாளர்களுடன் தொழில்சார் தொடர்புகளைப் பேணல் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலையில் ஊடகம் தொடர்பில் அறிவூட்டல் மற்றும் ஊடகப் பிரிவை ஆரம்பித்து வைத்தல் என்பவற்றை நோக்கமாகக்கொண்டு குறித்த ஒப்பந்தமானது கைச்சாத்திடப்பட்டது.

வவுனியா ஊடக அமையம் சார்பாக அதன் தலைவர் ப.கார்த்தீபனும், அமெரிக்க நிறுவனத்தின் சார்பாக அந்நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் ஜெ.கார்த்திகேயனும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

இதற்கமைவாக எதிர்வரும் 4 மாதங்களுக்கு குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதில் வவுனியா ஊடக அமையத்தின் உறுப்பினர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த ஆனிப்பொங்கல்



தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த ஆனிப்பொங்கல் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (04) நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றது.

இவ் வருட ஆடி குளிர்த்தி பொங்கலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரான காலத்தில் முருகப்பெருமானுக்கு விசேட பூசைகள் நடத்தப்பட்டு நள்ளிரவு 12 மணியளவில் ஆலய பூசகர்கள் பெருங் கடலும் தொண்டைமானாறு வாவியும் இணையும் இடத்துக்குச் சென்று வெள்ளைத் துணியினால் வாய் கட்டப்பட்ட மண் குடத்தில் கடல் நீர் எடுத்து வந்து விசேட பூஜை வழிபாடுகள் நடத்தி ஆலய மூலஸ்தானத்தில் வைத்து திங்கட்கிழமை வரையான ஒரு வார காலத்திற்கு கடல் நீரில் விளக்கெரித்து பொங்கல் பொங்கும் சம்பிரதாயபூர்வ வைபவம் இடம்பெற்றது. இதன்போது பெருமளவான பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி கண்ணகி அம்மனுக்காக பொங்கல் பொங்கி படைத்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# கிளிநொச்சியில் விழிப்புணர்வு வீதி நாடகம்





அரசகரும மொழிகள் தினம் மற்றும் அரச கரும மொழிகள் வாரத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு வீதி நாடகம் நேற்று முன்தினம் (04) செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன.

அரச கரும மொழிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள "மொழி" விழிப்புணர்வு வீதி நாடகம் கிளிநொச்சி மாவட்ட செயலக முன்றிலில் நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு ஆற்றுகை செய்யப்பட்டது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் செயற்படுகின்ற தேசிய மொழிகள் பிரிவின் ஒழுங்குபடுத்தலில் குறித்த ஆற்றுகை நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த "மொழி" விழிப்புணர்வு வீதி நாடகம் கலாலய கலைஞர்கள் மற்றும் கிளிநொச்சியில் அமைந்துள்ள தேசிய மொழிகள் பிரிவின் வட மாகாண மத்திய நிலையம் என்பவற்றின் இணைந்த தயாரிப்பில் ஆற்றுகை செய்யப்பட்டது.

கடந்த முதலாம் திகதி ஆரம்பமான அரச கரும மொழிகள் வாரம் நேற்று புதன்கிழமை வரை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், தேசிய மொழிகள் பிரிவின் உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக தேசிய மொழிகள் பிரிவின் இணைப்பாளர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## புத்தூர் தாக்குதல் விவகாரம்

# 25 பெண்களுக்கு பிணை; 6 ஆண்கள் விளக்கமறியலில்: தொடர்கிறது விசாரணை

யாழ்ப்பாணம், புத்தூர் பகுதியில் இரண்டு வீடுகளுக்குள் புகுந்து இரண்டு இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியது மட்டுமன்றி, சொத்துகளுக்கும் சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் இதுவரையில் 58 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கடந்த 29ஆம் திகதி 25 பெண்கள் உட்பட 31 பேர் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது 25 பெண்களும் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன் ஏனைய 06 ஆண்களையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், தொடர் விசாரணைகளை முன்னெடுத்துவரும் அச்சுவேலி பொலிஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை மூவரைக் கைது செய்திருந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை 24 பேரைக் கைது செய்துள்ளனர். இதற்கிணங்க குறித்த சம்பவம் தொடர்பில் இதுவரையில் 58 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புத்தூர் பகுதியில் உள்ள கிராமமொன்றில் வசிக்கும் பெண்களின் படங்களை கணினி வரைகலை (கிராஃபிக்ஸ்) மூலம் ஆபாச படங்களாக மாற்றம் செய்து, அதனை சமூக ஊடகங்களில் பகிரப்பட்டிருந்தது.

இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஊர் மக்கள் இணைந்து முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்நிலையில், கடந்த 28ஆம் திகதி இரவு ஊரில் உள்ள இரு இளைஞர்களே அவ்வாறு பெண்களின் படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு அந்த இளைஞர்களின் வீடுகளுக்குள் புகுந்து அவர்கள் மீது மூர்க்கத்தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளதுடன் வீட்டினுள் இருந்த பெறுமதியான பொருட்களையும் அடித்து உடைத்து அவற்றுக்குத் தீ வைத்துள்ளனர்.

இது தொடர்பில் அறிந்த அச்சுவேலி பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று தாக்குதலில் காயமடைந்த இளைஞர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முயன்ற போது, பொலிஸாருடன் முரண்பட்டு பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதில் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் காயமடைந்துள்ளார். இதன்போது நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதனையடுத்து அங்கு கூடியிருந்த ஊர் மக்களை அவ்விடத்திலிருந்து அகற்றிவிட்டு காயமடைந்த இரு இளைஞர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஆகியோரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 2000 ஆசிரியர்களுக்கு சப்ரகமுவவில் வெற்றிடம்

## நிவர்த்திக்க விரைவில் நடவடிக்கையென ஆளுநர் நவின் தெரிவிப்பு



சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் அதன் இணைத் தலைவர்களான சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க மற்றும் கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்ரமசிங்க அகியோர் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (30) கேகாலை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கேகாலை மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் உட்பட அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே ஆளுநர் நவின் திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சப்ரகமுவ மாகாணத்தில் இரண்டாயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அவ்வெற்றிடங்களை விரைவில் நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியைப் பெற்றுகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

நான் பெருந்தோட்ட அமைச்சராக இருந்தபோது 2018ஆம் ஆண்டு 'பாம்' மரங்கள் வளர்ப்பதை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேன்.

நாட்டில் காணப்படும் பொருளாதாரப் பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. இதனைத் தீர்ப்பதற்கு நாங்கள் அனைவரும் பேதங்களை மறந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

என்னிடம் அரசியல் நிகழ்சிநிரல் கிடையாது. ஆளுநர் பதவியை சரியாகச் செய்வேன். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கும் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பும் அவசியமாகும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# நெல்லிமலைத் தோட்டத்தில் மரம் வீழ்ந்து 4 பிள்ளைகளின் தாயொருவர் உயிரிழப்பு

## படுகாயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில்

கண்டி நிருபர்

வத்தேகம, மடுகலை நெல்லிமலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண் தொழிலாளிகள்மீது மரம்முறிந்து வீழ்ந்ததில் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள் ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நெல்லிமலைத் தோட்டத்தில் நேற்றுமுன்தினம் கொழுந்து பறித்துக்கொண்டிருந்தபோது மரம் முறிந்து வீழ்ந்த நிலையில் இருவர் காணமடைந்த காயமடைந்த நிலையில் வைத்தியசாலை அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே பெண் தொழிலாளியொருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொரு தொழிலாளி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் நான்கு பிள்ளைகளின் தாயான சண்முகம் விஜயலட்சுமி என்பவரே உயிரிழந்துள்ளார்.

# இறக்குவானை ஹோட்டல் அறையில் யுவதி மரணம்: தற்கொலையாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகம்





இறக்குவானை பகுதியிலுள்ள ஹோட்டல் அறையொன்றிற்குள் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்ட யுவதி, தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவிக்கையில்,

சடலம் மீதான பிரேத பரிசோதனைகள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. ஆரம்பகட்ட விசாரணைகளின் ஊடாக இது தற்கொலையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

எனினும், முழுமையான விசாரணைகள் நிறைவடைந்ததன் பின்னரே உயிரிழப்புக்கான காரணத்தை வெளிப்படுத்த முடியும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை இறக்குவானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இறக்குவானை, மாதம்பை பகுதியிலுள்ள ஹோட்டல் அறை ஒன்றுக்கு இளைஞன் ஒருவரும், யுவதி ஒருவரும் நேற்றுமுன்தினம் (04) சென்றுள்ளனர்.

யுவதியை அறைக்குள் விட்டுவிட்டு குறித்த இளைஞன் வெளியில் சென்று மீண்டும் ஹோட்டல் அறைக்குத் திரும்பியவேளை அறை உட்பக்கமாக மூடப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த இளைஞன் கதவைத் திறப்பதற்கு முயற்சித்தும் அது திறக்கமுடியாதுபோகவே ஹோட்டல் நிர்வாகத்திற்கு அறிவித்துள்ளார்.

ஹோட்டல் ஊழியர் ஒருவரின் உதவியுடன் யன்னல் வழியாக பார்த்தபோது, யுவதி தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்த நிலையில், யன்னல் வழியாக உள்ளே சென்ற இளைஞன், யுவதியை மீட்டு கஹவத்தை வைத்தியசாலையில் சேர்த்துள்ளார். எனினும், யுவதி உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் குறித்த இறக்குவானையைச் சேர்ந்த 23 வயதான இளைஞன் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த யுவதி (22 வயது) இறக்குவானை பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மரம் முறிந்து வீழ்ந்து 8 மாணவர்கள் காயம்



கண்டி நிருபர்

கேகாலை, எகிரியாகல பகுதியில் உள்ள பாடசாலைக் கட்டடத்திற்கு மேல் மரமொன்று முறிந்து விழுந்ததில் எட்டு மாணவர்கள் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் நேற்றுமுன்தினம் (04) தெரிவித்தனர்.

இதேவேளை, காயமடைந்த மாணவர்கள் எட்டுப்பேரும் கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக கேகாலைப் பொலிஸார் தெரிவித்தனர். பாடசாலைக் கட்டடம் மீது மரம் முறிந்து வீழ்ந்தநிலையில் பாடசாலைக் கட்டடக் கூரைக்கு போடப்பட்டிருந்த ஓடுகள் உடைந்து கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மாணவர்கள்மீது வீழ்ந்ததனாலேயே இம் மாணவர்கள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உடவளவை நீர்த்தேக்க நீர்மட்டம் வீழ்ச்சி

# குடிநீர் வழங்குவதில் நெருக்கடி: 89,000 குடும்பங்கள் நிர்க்கதி

ஏ.ஏ.எம்.பாயிஸ்

உடவளவை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளதால் சுமார் 89ஆயிரம் குடும்பங்கள் நீர்தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளனர் என இந்நீர்த்தேக்கத்தின் பொறியியலாளர் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

அத்துடன் இந்நீர்த்தேக்கத்தின் உதவியால் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் 36ஆயிரம் குடும்பங்களின் 25 ஆயிரத்து 300 ஹெக்டேயர் வயல் நிலங்ககளுக்கு மேலும் 10 தினங்களுக் கு மாத்திரமே நீர் விநியோகத்தை வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே எதிர்வரும் தினங்களில் மழைகிடைக்காவிட்டால் மேற்குறிப்பிட்ட இருதரப்பினரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களின் பெரும்பகுதியின் குடிநீர்தேவை இந்நீர்த்தேக்கத்தின் மூலம் நிவர்த்தி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வாரியபொலவில் பால் பதனிடும் தொழிற்சாலை திறப்பு



கண்டி நிருபர்

வாரியபொலயில் 800 மில்லியன் ரூபா செலவில் சிறிய அமைப்பினாலான பால் பதனிடும் நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேற்படி பால்பதனிடும் நிலையத்தைப்போன்று மேலும் ஐந்து தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன.

மேற்படி பால் பதனிடும் நிலைய திறப்புவிழா நேற்றுமுன்தினம் (04) இடம்பெற்ற நிலையில், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பிரதம அதிதியாகக் கலந்துகொண்டிருந்தார்.

இத் தொழிற்சாலையூடாக தினம் 40ஆயிரம் லீற்றர் பால் பதனிட முடியும். 4,200 விவசாயிகள் அதற்கான திரவப்பாலை விநியோகிக்கவுள்ளனர்.

எனவே, ஒரு லீற்றர் திரவப் பாலுக்கு ரூபா 140 ரூபா வீதம் வழங்கி கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மண்மேடு சரிந்து வீடு சேதம்

## பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்க நடவடிக்கை





(எஸ்.கணேசன்

திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறேக்கிலி தோட்டப் பகுதியில் நேற்று (05) காலை மண்மேட்டுடன் கூடிய கொங்கிரீட் கட்டடமொன்று சரிந்து வீழ்ந்ததால் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொடுக்கவும் திம்புள்ள, பத்தனை கிராம அதிகாரியூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மலைநாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அடை மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவால் சிலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையிலேயே திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறேக்கிலி தோட்டப் பகுதியில் நேற்று (05) காலை மண்மேட்டுடன் கூடிய கொங்கிரீட் கட்டடமொன்று சரிந்து வீழ்ந்ததால் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

இதன்போது வீட்டில் யாரும் இல்லாததன் காரணமாக உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. எனினும், வீட்டுப் பொருட்கள், சமையலறை மற்றும் படுக்கையறை என்பன முற்றாக சேதமடைந்துள்ளதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்கும் நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் திம்புள்ள,பத்தனை கிராம அதிகாரியூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை நிலவுவதனால் மண்சரிவு அபாயங்கள் மேலும் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் இதனால் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் திம்புள்ள, பத்தனை பொலிஸார் மக்களை அறிவுறுத்தியுள்ளனர்.



கலைஞர் எஸ்.என்.நடராஜாவின் 50 வருட கலைப்பணியை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு பழைய நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. சங்க கவி நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் நடராஜாவை பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார். துரைராசா சுரேஸ்,தெ.செந்தில்வேலவர் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வீதியில் மரம்,மின் கம்பம் முறிந்து வீழ்ந்ததால் போக்குவரத்து பாதிப்பு





செ.திவாகரன், டி.சந்ரு

கடும் காற்று காரணமாக நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி பிரதான வீதியில் மரமொன்றும் மின்கம்பமொன்றும் முறிந்து வீழ்ந்ததால் அவ்வீதியினூடான போக்குவரத்து தடைப்பட்டது.

குறித்த சம்பவம் நேற்று புதன்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.இசம்பவத்தினால் எவருக்கும் காயமேற்படவில்லை என நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், பிரதேச மக்கள் இணைந்து வீதியின் குறுக்கே வீழ்ந்த மரத்தை வெட்டி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, நுவரெலியா பிரதான நகருக்கு மின் இணைப்பை வழங்கும் மின்கம்பம் முறிந்து வீழ்ந்தமையால் மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

இதனைச் சீர்செய்யம் பணியில் மின்சார சபை ஊழியர்கள் ஈடுபட்டனர்.

பாரிய மரங்கள் காணப்படும் இடங்களில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு நுவரெலியா இடர் முகாமைத்துவ மத்திய நிலையப் பணிப்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.







குரு பூர்ணிமா தினத்தன்று கொழும்பு, புதுச்செட்டித் தெரு சாயி பாபா ஆலயத்தில் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் சமய அனுஷ்டானங்கள் இடம்பெற்றன.இதன்போது பல்லக்கு ஊர்வலம், கும்பநீர் அபிஷேகம் மற்றும் பஜனை என்பன நடைபெற்றன.

# மோட்டார்சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரமாக இருந்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஓட்டுநர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொடிகாமம், வரணி, சுட்டிபுரம் பகுதியில் நேற்று புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி, தேவரையாளி பகுதியைச் சேர்ந்த புஸ்பராசா ராஜ்குமார் (வயது 30) என்பவரே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த நண்பனை அவரது வீட்டில் இறக்கி விட்டு மோட்டார் சைக்கிளில் வடமராட்சியில் உள்ள தனது வீடு நோக்கி திரும்பிக்கொண்டிருந்தபோதே மேற்படி அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# காதலனை கடத்திச் சென்ற யுவதியை பொலிஸார் தேடல்

பின்வத்த பிரதேசத்தில் தன் காதலனை கடத்திச் சென்றமை தொடர்பில் யுவதியொருவரைத் தேடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பின்வத்த பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காதல் உறவைப் புறக்கணித்த இளைஞன் ஒருவரே குறித்த யுவதியால் கடத்தப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த கடத்தப்பட்டதாகக் கூறப்படும் இளைஞனின் தாயார் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பின்வத்த பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தப்பட்ட இளைஞனும் தேடப்படும் யுவதியும் காதலித்து வந்ததாகவும் குறித்த யுவதியை இளைஞன் திருமணம் செய்து கொள்ள விரும்பாத காரணத்தினால் இந்தக் கடத்தல் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். பின்வத்த பிரதேசத்தில் முச்சக்கர வண்டியில் மேலும் சிலருடன் வந்த யுவதி இளைஞனை கடத்திச் சென்று பாழடைந்த வீடொன்றில் மறைத்து வைத்து மீண்டும் விடுவித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடத்தலை மேற்கொண்டதாகக் கூறப்படும் யுவதி மற்றும் அவருடன் வந்த நபர்களைக் கண்டறிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் 3 வீடுகளில் திருட்டு

## மூவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணத்தில் மூன்று வீடுகளை உடைத்து திருடிய குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரும் அவர் திருடியதாகக் கூறப்படும் பொருட்களை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்களும் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மூன்று வீடுகள் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் உரிமையாளர்களினால் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், திருட்டு குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரை கடந்த திங்கட்கிழமை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது திருடப்பட்ட பொருட்களை வேறு இருவரிடம் ஒப்படைத்துள்ளதாக சந்தேக நபர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், இருவரை கைது செய்த பொலிஸார் அவர்களிடமிருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் இயந்திரம், கிரைண்டர் உள்ளிட்ட மின்சாதனங்கள் மீட்கப்பட்டன.

# கிளிநொச்சியில் கௌரவிப்பும் 'தூவானம்' திரைப்படக் காட்சியும்



சாவகச்சேரி நிருபர்

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் மருத்துவ மற்றும் பொறியியல்துறைகளில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிப்பும் 'தூவானம்' திரைப்படக் காட்சியும் கடந்த திங்கட்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி ஜெ.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன், வைத்திய நிபுணர் சி.சிவன்சுதன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (05.07.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 198.5938 | 211.3416 |
| கனேடியன் டொலர் | 224.4721 | 238.6223 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40.7016 | 43.9692 |
| யூரோ | 324.4317 | 342.9584 |
| ஜப்பான் யென் | 2.0630 | 2.1794 |
| சிங்கப்பூர் டொலர் | 220.1406 | 233.6474 |
| ஸ்ரேலிங் பவுன் | 379.0665 | 399.8806 |
| சுவிஸ் பிராங்க் | 330.5507 | 352.2719 |
| ஐ.அ. டொலர் | 298.8980 | 313.6680 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 812.3852 |
| குவைட் | குவைட் தினார் | 996.6841 |
| ஓமான் | ஓமான் றியால் | 795.5144 |
| கட்டார் | கட்டார் றியால் | 84.0384 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 81.6631 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 83.3795 |

# பெண் தலைமைத்துவ குடும்பமொன்றுக்கு இராணுவத்தால் வீடு நிர்மாணம்

இராணுவத்தால் பெண் தலைமைத்துவ குடும்பமொன்றுக்கு வீடொன்று அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

சின்னையா மகன் ஜோச் அருள்ராஜின் நினைவாக சின்னையா தபிதா, வன்னி எயிட், நான்காவது சிங்க படைப்பிரிவின் முழுமையான ஆளணி கட்டுமான உதவியுடன் குறித்த வீடு அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று அல்வாய் மேற்கு தம்பியன்புலம் கிராமத்தில் இடம்பெற்றது.

நான்காவது சிங்க படைப்பிரிவின் தளபதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கட்டைக்காடு 55 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரட்ண, சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிறி, கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பருத்தித்துறை பொது வைத்தியசாலை மருத்துவர் உமாசுதன், வன்னி எயிட் ஒருங்கிணைப்பாளர் ஜெகநாதன், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி சேந்தன், 551 ஆவது படைப்பிரிவுத் தளபதி பிரிகேடியர் யூட் காரிய கரவண,இராணுவ அதிகாரிகள், கிராம சேவகர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# புதிய இடத்துக்கு மாற்றப்பட்ட பொலிஸ் நிலையம் திறந்து வைப்பு





பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேசத்தில் இடமாற்றப்பட்ட புதிய பொலிஸ் நிலையம் புதன்கிழமை(05) வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021.11.29 அன்று உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டிருந்த நிந்தவூர் பொலிஸ் நிலையம் தற்போது கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியில் அமைந்துள்ள புதிய இடத்துக்கு மாற்றப்பட்டு உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம்.நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புதிய பொலிஸ் நிலையத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்த ரத்னாயக்க, கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.புத்திக, நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எம்.அப்துல் லத்தீப், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம்.றயீஸ் உட்பட சர்வமதத் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இதன்போது அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறித்த பொலிஸ் நிலையத்தை இணைத்து அமைக்கப்பட்ட டென்னிஸ் விளையாட்டுக் கூடத்தை பார்வையிட்டதுடன் டென்னிஸ் விளையாட்டிலும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் பொலிஸ் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

# அம்பாறையில் காலநிலையில் மாற்றம்

நற்பிட்டிமுனை செய்தியாளர்

அம்பாறை மாவட்டத்தில் திடீர் காலநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளதோடு குளிரான காற்றும் வீசத் தொடங்கியுள்ளது.

இதனால் மீன்பிடிக்கச் செல்வோரும் தொழிலுக்குச் செல்வதைத் தவிர்த்துள்ளனர். கடும் உஷ்ணத்தால் சிரமங்களை எதிர்கொண்ட பொதுமக்கள் சற்று ஆறுதல் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

அதிகளவு விவசாயக் கண்டங்களில் வேளாண்மை கதிர்விடும் நிலையில் இருப்பதால் இக்காற்று விவசாயத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்பும் காணப்படுகிறது. பிற்பகலில் நகரப் பகுதிகளுக்கு மக்கள் வருகை குறைந்து வருவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.



சம்மாந்துறை, மல்வத்தை பகுதியில் மதுபானக் கடை திறப்பதற்கு எதிராக பொதுமக்கள் கையெழுத்து வேட்டையில் புதன்கிழமை(05) ஈடுபட்டனர். **படம்:** திராய்க்கேணி செய்தியாளர்



நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கச்சக்கொட்டித்தீவு - மாகமாறு வீதி மீண்டும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் எம்.பியின் முயற்சியின் பயனாக ஆரம்பிக்கப்பட்டு செப்பனிடும் வேலைகள் இடம்பெற்று வருவதைக் காணலாம்.

# டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் குறித்து விளக்கமளிக்கும் நிகழ்வு



மட்டக்களப்பு செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையினால் முன்னெடுக்கப்படவுள்ள டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் தொடர்பாக தொண்டர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு புதன்கிழமை(05) இடம்பெற்றது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைக் காரியாலயத்தில் தலைவர் த.வசந்தராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது மட்டக்களப்பு கிளையால் தெரிவுசெய்யப்பட்ட பொது இடங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட பல இடங்களில் சிரமதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதோடு, வீடுகளுக்கும் நேரில் சென்று மக்களை அறிவுறுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தலைவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துடன் இணைந்து கிராம மட்ட அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் ஆதரவுடன் இன்று வியாழக்கிழமை(06) ஆரம்பிக்கப்படவுள்ள இந்நடவடிக்கை தொடர்ச்சியாக நான்கு மாதங்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது எவ்வாறு கடமை மேற்கொள்வது, டெங்கு நுளம்புகளின் தாக்கங்களை அவதானித்தல், எவ்வாறு வீட்டுத் தரிசிப்புகளை மேற்கொள்வது போன்ற பல விடயங்கள் தொடர்பில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார வைத்திய பிரிவைச் சேர்ந்த வைத்தியர் ஏ.கார்த்திகா, வைத்தியர் திருமதி டி.குணரெத்னம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துகளையும் விளக்கங்களையும் தொண்டர்களுக்கு வழங்கினர்.

இதன்போது நிறைவேற்று உத்தியோகத்தர் பி.வேணுஷா, திட்ட இணைப்பாளர் முகிலன் மற்றும் தொண்டர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மீலாத் தினப் போட்டி நடத்த புத்திஜீவிகள் கோரிக்கை

நற்பிட்டிமுனை செய்தியாளர்

கல்வியமைச்சும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து அகில இலங்கை மீலாத் தினப் போட்டிகளை நடத்த ஆவன செய்ய வேண்டுமென புத்திஜீவிகள் கல்வியமைச்சுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த வருடமும் இந்தப் போட்டிகள் இடம்பெறாததைச் சுட்டிக்காட்டியுள்ளதுடன் இந்த வருடமாவது அவை இடம்பெறவேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளை வளர்த்து மாணவர்களிடம் இலைமறை காய்களாய் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்த பல்வேறு போட்டிகளை கல்வியமைச்சு நடத்தி வருவதை குறிப்பிட்டுள்ளதோடு ஏனைய போட்டிகள் இடம்பெறுவதையும் குறிப்பிட்டுள்ளனர். கோரிக்கையின் பிரதிகள் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவின் பணிப்பாளர் மேஜர் நசுமுதீனுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அமரர் தங்கத்துரையின் 26ஆவது நினைவுதினம்



மூதூர் செய்தியாளர்

திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அ.தங்கத்துரையின் 26ஆவது நினைவு தினம் அவரது சொந்த ஊரான மூதூர் - கிளிவெட்டி பகுதியில் புதன்கிழமை(05) காலை அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வை தி/மூ/கிளிவெட்டி மகா வித்தியாலய பாடசாலை நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தது. இதன்போது அமரர் அ.தங்கத்துரையின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றதுடன் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் தீபச்சுடர் ஏற்றி மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

தமிழ் பேசும் மக்களுக்கான சிறந்த அரசியல் தலைவராக விளங்கியவர் அமரர் தங்கத்துரை. திருகோணமலை மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து 1997ஆம் ஆண்டு ஜூலை 05ஆம் திகதி மரணமடைந்தார்.

இனம், மதம் மொழிகளுக்கு அப்பால் பிரிவினை பாராது சேவை செய்த சிறந்த அரசியல் சேவகனான இவருடைய சேவையைக் கௌரவிக்கும் முகமாக 25ஆவது நினைவு தினத்தையொட்டி கடந்த வருடம் கிளிவெட்டியில் மக்களால் நினைவுச் சிலை நிறுவப்பட்டு தந்தை செல்வநாயகத்தின் புதல்வர் சந்திரகாசனால் திருவுருவச்சிலை திறந்துவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு கோட்டைக்கல்லாறு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவம் ஜூன் 28ஆம் திகதி திருக்கதவு திறந்தலுடன் ஆரம்பமாகியது. இவ்விழாவின் தொடர்ச்சியாக ஞாயிற்றுக்கிழமை 02ஆம் திகதி தீமிதிப்பு நிகழ்வு இடம்பெற்றதுடன் திங்கட்கிழமை(03) திருக்கதவு அடைத்தலுடன் விழா நிறைவுற்றது. **படம்:** குருக்கள்மடம் செய்தியாளர்

# இஞ்சி, பச்சை மிளகாய்க்கு மட்டக்களப்பில் தட்டுப்பாடு

## அதன் விலைகளும் அதிகரிப்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் பச்சை மிளகாய் மற்றும் இஞ்சிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் அதன் விலைகள் உயர்வடைந்துள்ளதாகவும் மட்டக் களப்பு பொதுச் சந்தை மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, ஒரு கிலோ பச்சை மிளகாயின் விலை 1,300 ரூபாவாகவும் ஒரு கிலோ இஞ்சி 03 ஆயிரம் ரூபாவாகவும் ஒரு கிலோ கரட் 500 ரூபாவாகவும் உயர்வடைந்துள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது பச்சை மிளகாய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் ஒரு கிலோ பச்சை மிளகாயை 1,200 ரூபாவுக்கு கொள்வனவு செய்து 1,300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்ற அதே வேளை, சந்தையில் ஒருகிலோ இஞ்சி 03 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதுடன் கொள்வனவு செய்ய முடியாத ளவுக்கு அவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறே கரட் ஒரு கிலோ 500 ரூபாவாகவும் உருளைக்கிழங்கு 240 ரூபாவாகவும் பெரிய வெங்காயம் 150 ரூபாவாகவும் உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# மத்தியஸ்தர் சபையில் எதிராளி மீது தாக்குதல்

## சட்டத்தரணி உட்பட மூவர் கைது அக்கரைப்பற்றில் சம்பவம்

கனகராசா சரவணன்

அக்கரைப்பற்று மத்தியஸ்தர் சபையில் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முறைப்பாடு தொடர்பான விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது எதிராளி மீது தாக்குதல் மேற்கொண்ட முறைப்பாட்டாளர் ஒருவரும் அவரது மகனான சட்டத்தரணி ஒருவர் உட்பட மூவர் செவ்வாய்க்கிழமை (04) கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவரின் தந்தையார் நபரொருவருக்கு 10 இலட்சம் ரூபாவை கடனாகக் கொடுத்த நிலையில் வாங்கிய கடனை அவர் திருப்பித் தர மறுப்பதாக அவருக்கு எதிராக அக்கரைப்பற்று மத்தியஸ்தர் சபையில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து, முறைப்பாட்டாளரையும் எதிராளியையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (02) மத்தியஸ்தர் சபைக்கு வருமாறு அழைப்பாணை வழங்கப்பட்டு இருசாராரும் அன்றைய தினம் மத்தியஸ்தர் சபையில் ஆஜராகிய நிலையில் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விசாரணை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது எதிராளிக்கும் முறைப்பாட்டாளருக்குமிடையே வாக்குவாதம் இடம்பெற்றது.

இதன்போது எதிராளி மீது முறைப்பாட்டாளர் கதிரையால் தாக்குதல் நடத்தியதையடுத்து அவர் மீது அவரின் மகனான சட்டத்தரணி உட்பட 05 பேர் தாக்குதலை நடத்தியதையடுத்து அவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனையடுத்து தாக்குதலை மேற்கொண்டவர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். இதனையடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டதையடுத்து பொலிஸார் வரவழைக்கப் பட்டு இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்ட நிலையில், தாக்குதலை மேற்கொண்டவர்கள் தலைமறைவாகி வந்த நிலையில் செவ்வாய்க்கிழமை (04) சட்டத்தரணி அவரது தந்தையார் உட்பட மூவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த நிலையில் அவர்களை பொலிஸார் கைது செய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்கள் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது அவர்களை பதில் நீதவான் பிணையில் விடுவித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.



நாளாந்த பத்திரிகைகளின் மின்னிதழ்களை மாணவர்கள், வாசகர்கள், பத்திரிகையாளர்கள் மாத்திரமல்லாமல் புத்திஜீவிகளும் எவ்வேளையிலும் பார்க்கக்கூடிய வசதியினை அட்டாளைச்சேனை பொது நூலகத்தில் பிரதேச சபை ஏற்பாடு செய்துள்ளது. **படம்:** திராய்க்கேணி செய்தியாளர்

# ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தின் முப்பெரும் விழா



கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தின் முப்பெரும் விழா செவ்வாய்க்கிழமை (04) மாலை பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

அதிபர் திருமதி சுதாகரி மணிவண்ணனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாகவும் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கே.சித்திரவேல் மற்றும் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, கலையாழி சஞ்சிகையும் வெளியிட்டுவைக்கப்பட்டது.

# திகிலிவட்டை ஆற்று படகுப்பாதை இயங்காததால் மக்கள் அசௌகரியம்

## ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை

*களுதாவளை செய்தியாளர்*

மட்டக்களப்பு, கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திகிலிவட்டைக்குச் செல்லும் ஆற்றைக் கடக்கும் படகுப் பாதை மூன்று மாதங்களாக இயங்காத காரணத்தால் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும், குறித்த ஆற்றுப் பகுதியில் முதலை வாழ்வதால் தினமும் ஆபத்தான பயணத்தையே மேற்கொள்வதாகத் தெரிவிக்கும் பொதுமக்கள், படகுப் பாதையின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்த நிலையிலும் பாதையை இயங்க வைப்பதிலும் பிரதேச சபை நிர்வாகம் அக்கறையின்றி செயற்படுவதாகவும் இதுதொடர்பாக கோறளைப்பற்று பிரதேச சபை நிர்வாகத்தினரிடம் முறையிட்டபோதும் இதுவரை எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையெனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

திலிகிவட்டை, கோராவெளி, குடும்பிமலை, பெரியவட்டுவான் உட்பட பல கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பொது மக்கள் தினமும் இந்தப் பாதையூடாகவே பயணம் செய்கின்றனர்.

கிரான் - புலிபாய்ந்தகல் வீதி வெள்ளத்தில் மூழ்கி தரைவழிப் போக்குவரத்து தடைப்படும் சந்தர்ப்பங்களில் குறித்த இயந்திரப் படகுப் பாதையூடாகவே அதிகளவான மக்கள் பயணிக்கின்றனர்.

சந்திவெளி கிராமத்திலிருந்து திகிலிவட்டை கிராமத்துக்குச் செல்வதற்கு சுமார் 300 மீற்றர் தூரம் ஆற்றைக் கடக்க வேண்டிய நிலை உள்ளது. மழைகாலங்களில் ஆறு பெருக்கெடுத்து சுமார் 500 மீற்றர் வரை கடக்க வேண்டிய நிலை ஏற்படும்.

கடந்த காலங்களில் நீர்வழிப் போக்குவரத்துக்கு கோறளைப்பற்று பிரதேச சபையினால் இயந்திரப் பாதை பயன்படுத்தப்பட்டு வந்தது. குறித்த பாதை கடந்த மூன்று மாதங்களாக இயங்காத நிலையில் இயந்திரப் படகு மூலமே சேவை முன்னெடுக்கப்படுகிறது.

திகிலிவட்டை அரச தமிழ் கலவன் பாடசாலையில் தரம் 11 வரை வகுப்புகள் காணப்படுவதால் அப்பிரதேசத்திலிருந்து உயர்தரக் கல்விக்காக மாணவர்கள் குறித்த ஆற்றைக் கடந்து சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலயத்துக்கு இயந்திரப்படகு மூலமே செல்லவேண்டிய நிலை காணப்படுகிறது. இவர்களின் சீருடைகள் அழுக்கான நிலையிலும் பாதணிகள் அணிந்து செல்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனையவர்களிடம் சேவைக் கட்டணமாக 20 ரூபா அறவிடப்பட்டது. வாகனங்களுக்கும் தனியாக கட்டணங்கள் அறவிப்பட்டது. ஆனால், தற்போது இயந்திரப் படகு சேவைக்கு பொதுமக்களிடம் 50 ரூபா அறவிடப்படுகிறது. இவ்விடயம் தொடர்பாக கோறளைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் சண்முகநாதன் நவநீதனிடம் கேட்டபோது, ''சேதமடைந்த படகுப்பாதையின் புனரமைப்பு 15 இலட்சம் ரூபா செலவில் நடைபெற்றுவருகிறது. மழை காரணமாக வேலைகள் தடைப்பட்டதன் காரணமாகவே புனரமைப்பு வேலைகளில் தாமதம் ஏற்பட்டிருந்தது. தற்காலிகமாக இயந்திரப் படகு தினமும் ஆயிரத்து 500 ரூபா வாடகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது. தினமும் 20 லீற்றர் மண்ணெண்ணெய் சபையினால் வழங்கப்படுகிறது.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இலவசமாக சேவை வழங்கப்படுகிறது. ஏனையோரிடம் 50 ரூபா பெறப்படுகிறது. அந்த நிதி படகு வாடகை மற்றும் மண்ணெண்ணெய்க்கு செலவிடப்படுகிறது. இன்னும் ஓரிரு தினங்களில் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவரின் பங்குபற்றலுடன் படகுப் பாதைச் சேவை மீள ஆரம்பிக்கப்படும்''- என்றார்.

# நெற்கதிர்களுக்கு ஏற்பட்டுள்ள நோய் தொடர்பில் ஆராய நிபுணர்கள் விஜயம்



*கல்லடி செய்தியாளர்*

மட்டக்களப்பிலுள்ள பல்வேறு பகுதிகளில் சிறுபோக வேளாண்மை அறுவடை இடம்பெறவுள்ள நிலையில், நெற்கதிர்கள் கறுப்பு நிறப் பதராகக் காணப்படுகின்றன. இதனை ஆராய்வதற்காக பத்தலகொட விவசாய ஆராய்ச்சி நிலையக் குழுவினர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

அதனடிப்படையில், செவ்வாய்க்கிழமை (04) மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி மற்றும் பழுகாமம் ஆகிய கமநல அபிவிருத்திப் பிரிவுகளில் பாதிக்கப்பட்ட வேளாண்மைகளை சென்று பார்வையிட்டதுடன், மாதிரிகளும் எடுத்துச் செல்லப்பட்டன.

இதன்போது இத்தாக்கமானது, அதிக வெப்பம் காரணமாக வந்திருக்கலாம் எனவும் பாதிப்புக்குள்ளான நெல்லை விதை நெல்லுக்குப் பயன்படுத்த வேண்டாமெனவும் அதிகாரிகளினால் பணிப்புரை விடுக்கப்பட்டது.

# முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில்

## ஹரீஸ் - இசாக் எம்.பிக்கள் ஜனாதிபதியுடன் பேச்சு

*மாளிகைக்காடு செய்தியாளர்*

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பினருடனான பேச்சுவார்த்தை காலதாமதமாவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், அநுராதபுர மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மான் ஆகியோர் புதன்கிழமை (05) காலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதாக மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பினருடனான பேச்சுவார்த்தை காலதாமதமாவது தொடர்பில் தெளிவுபடுத்தியதாகவும் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் பின்னர் உடனடியாக குறித்த பேச்சுவார்த்தைக்கு முஸ்லிம் கட்சிகளையும் முஸ்லிம் எம்.பிக்களையும் அழைக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், தடைசெய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புகளின் தடைநீக்கம் தொடர்பில் இதுவரை வர்த்தமானி அறிவிப்பு வெளிவராமை சம்பந்தமாக வினவியபோது பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகத்தர்கள் அது தொடர்பில் சகல பணிகளையும் மேற்கொண்டு வர்த்தமானி அறிவிப்பில் ஜனாதிபதி கையெழுத்திடத் தேவையான நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகவும் விரைவில் தடைநீக்க வர்த்தமானி அறிவிப்பு வெளிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் முஸ்லிம் சிவில் நிர்வாகசேவை அதிகாரிகளுக்கு உரிய கடமைப்பொறுப்புகளை வழங்குவதில் உள்ள பாரபட்சம் தொடர்பிலும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டதாகவும் இந்த விடயம் தொடர்பில் முஸ்லிம் புத்திஜீவிகளையும் முஸ்லிம் சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளையும் விரைவில் தான் சந்தித்துப்பேச ஏற்பாடு செய்வதாகவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

அஸ்வெசும பயனாளிகள் தெரிவில் பொருத்தமான பயனாளிகள் புறக்கணிக்கப் பட்டுள்ள விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு முன்வைத்தபோது உரிய பயனாளிகளுக்கு இந்த உதவிகள் கிடைக்கும் விதமாக அதிலுள்ள குறைபாட்டை நிவர்த்திசெய்யவுள்ளதாக உறுதியளித்த அதேவேளை, மாகாண சபைகளில் உள்ள நிர்வாகக் குறைபாட்டை சீர்செய்யவும் நிர்வாகத் திறனை அதிகரிக்கவேண்டிய அவசியம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் மாகாண அமைச்சுகளின் நிர்வாக வினைத்திறனை அதிகரிக்க புதிய பொறிமுறையை உருவாக்கி அதன்மூலமாக மாகாண அமைச்சுகள் வினைத்திறனுடன் செயற்பட வழிவகை ஏற்படும் என்றும் ஜனாதிபதி இதன்போது எங்களிடம் உறுதிபடக் கூறிய அதேவேளை, ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பில் முக்கிய பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக ஹரீஸ் எம்.பி. மேலும் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



*இதயத்தில் சுத்தமிருந்தால் இலட்சியத்தில் சித்தமிருக்கும். தத்தளிக்கும் மக்களை கரையேற்ற முன் வாருங்கள் எண்டு பாராளுமன்றத்தில சக தமிழ் கட்சித் தலைமைகளுக்கும் அழைப்பு குடுத்து டக்ளஸ் அம்மாச்சி பேசினாரு எலுவா? நீங்க 1994, தொடக்கம் பாராளுமன்றம் சென்று மந்திரிபதவி எடுத்து எத்தனபேர கரைசேர்தீங்க.. எத்தனபேர காட்டிக்குடுத்தீங்க அதயும் ஒள்ளுப்பம் சொல்லுங்க பாப்பம்!*

# அஸ்வெசும பயனாளிகளின் தெரிவு பிரச்சினை நிவர்த்திக்கப்பட வேண்டும்

## உண்மைக்கும் நீதிக்குமான வலையமைப்பு வலியுறுத்து



*மாளிகைக்காடு செய்தியாளர்*

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள 'அஸ்வெசும' சமூக நலன்புரி உதவித் திட்டப் பயனாளிகள் தெரிவில் காணப்படும் குறைபாடுகள் முறையாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என சிவில் அமைப்புகளை ஒன்றிணைத்த அம்பாறை மாவட்ட உண்மைக்கும் நீதிக்குமான வலையமைப்பு வலியுறுத்தியுள்ளது.

காரைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் இணைப்பாளர் எம்.ஐ.றியால் தலைமையில் நடைபெற்ற சந்திப்பின்போதே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நலன்புரி உதவித் திட்டமானது பாகுபாடில்லாது பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தில் 20க்கும் மேற்பட்ட சிவில் அமைப்புகள் இணைந்து விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளது.

# மட்டு. அரசடி சந்தி பிள்ளையார் ஆலயத்தில் திருடிய சந்தேகநபர் 03 மாதங்களின் பின் கைது

*கனகராசா சரவணன்*

மட்டக்களப்பு நகர் அரசடி சந்தி பிள்ளையார் ஆலயம் மற்றும் வீடுடைத்து பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசி உட்பட பல பொருட்களைத் திருடிவந்த ஏறாவூர் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞன் ஒருவரை செவ்வாய்க்கிழமை(05) கைது செய்துள்ளதுடன் திருடப்பட்ட 02 கையடக்கத் தொலைபேசிகளையும் மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி சனிக்கிழமை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள அரசடி சந்திப் பிள்ளையார் ஆலயத்தில் மடப்பள்ளி அறையில் வைக்கப்பட்டிருந்த குருக்களின் கையடக்கத் தொலைபேசிகள், 35 ஆயிரம் ரூபா பணம் மற்றும் திறப்புக்கோர்வை, கைப்பேசி என்பன திருட்டுப் போயுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிசிரிவி கெமராவில் சந்தேக நபர் பதிவாகியுள்ளதையடுத்து அவரை இனங்கண்டனர். இதனையடுத்து தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த பண்டாரவின் ஆலோசனைக்கமைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி ஜி.எம்.எஸ்.கஜநாயக்கா தலைமையிலான பொலிஸ் சார்ஜன்ட் குழுவினர் மேற்கொண்டுவந்த விசாரணையில் ஏறாவூர் நீதிமன்ற வீதியிலுள்ள சந்தேக நபரை கைதுசெய்துள்ளதுடன் இரண்டு கையடக்கத் தொலைபேசிகளையும் அவரிடமிருந்து மீட்டுள்ளனர்.

இதில் கைதுசெய்தவரிடம் மேற்கொண்ட விசாரணையில் அரசடி சந்தி பிள்ளையார் ஆலயத் திருட்டு மற்றும் இருதயபுரத்தில் வீடு ஒன்றில் கையடக்கத் தொலைபேசித் திருட்டு, போதனா வைத்தியசாலையில் கையடக்கத் தொலைபேசி என்பனவற்றைத் திருடியுள்ளதாகவும் ஏறாவூரில் பல திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள அதேவேளை, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொம்பன் யானை உயிரிழப்பு: விசாரணைகள் முன்னெடுப்பு

*திருமலை செய்தியாளர்*



திருகோணமலை, எத்தாபெந்திவெவ வயல் பகுதியில் புதன்கிழமை(05) அதிகாலை யானையொன்று உயிரிழந்தமை தொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக வனவிலங்குத் திணைக்கள உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

25 வயது மதிக்கத்தக்க 07 அடி நீளமான கொம்பன் யானையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த வாரங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து வந்தமையும் ஊருக்குள் புகுந்து வீடுகளையும் வீட்டுத் தோட்டங்களையும் சேதப்படுத்தி வருவதாகவும் பிரதேச மக்களால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும், யானையின் வாயில் வீக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் உயிரிழப்புக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் யானை உயிரிழந்தமை தொடர்பில் திருகோணமலை நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும் வன விலங்கு அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

யானை மரணித்தமை தொடர்பாக மிருக வைத்திய நிபுணர் சம்பவ இடத்துக்கு நாளை(இன்று) வருகை தரவுள்ளதுடன் பிரேத பரிசோதனைகளை முன்னெடுக்க உள்ளதாகவும் வனவிலங்கு திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். அத்துடன் மொரவெவ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

*கோணாவத்தை செய்தியாளர்*

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாகாம வீதியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 1050 மில்லிகிராம் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸ் சார்ஜன்ட்களான தாஹீர், அனஸ் ஆகியோர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று சந்தேகநபரைக் கைதுசெய்து செவ்வாய்க்கிழமை (04)நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

குறித்த நபரை 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மாளிகைக்காடு பிரதேசத்தில் தீவிரமடையும் கடலரிப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை





*சாய்ந்தமருது செய்தியாளர்*

மாளிகைக்காடு பிரதேசத்தில் தீவிரமடைந்து வருகின்ற கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் அவசர நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக மாளிகைக்காடு கிழக்கு வட்டார முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் எம்.எச்.நாஸர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம், கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான முதற்கட்ட தற்காலிக ஏற்பாடாக உடனடியாக உரப் பைகளில் மண் நிரப்பி கரையோரத்தை அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு கரையோரம் பேணல் திணைக்களம் முன்வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பிரதேசத்தில் தீவிரமடைந்துள்ள கடலரிப்பு காரணமாக கலாசார மண்டபம் உள்ளிட்ட கட்டடங்களும் வாடிகளும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மீனவர் அமைப்புகளுடன் இணைந்து பைசால் காசிம் எம்.பியின் கவனத்துக்கு இப்பிரச்சினையை கொண்டு சென்றதையடுத்து, செவ்வாய்க்கிழமை (04) மாலை அதிகாரிகள் சகிதம் அவர் இப்பகுதிக்கு விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்தார்.

அம்பாறை மாவட்ட கரையோரம் பேணல் திணைக்களப் பொறியியலாளர் எம்.துளசிதாஸன், காரைதீவு பிரதேச செயலாளர் ஜே.ஜெகராஜன், கல்முனை மாவட்ட கடற்றொழில் உதவி ஆணையாளர் எஸ்.ஸ்ரீரஞ்சன் மற்றும் உத்தியோகத்தர்கள் சிலரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இவ் உயர்மட்டக் குழுவினர் சேதமடைந்த இடங்களைப் பார்வையிட்டதுடன் மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகம், ஜனாஸா நலன்புரி அமைப்பு, மொத்த மீன் வியாபார வர்த்தக சங்கம், ஆழ்கடல் மீன்பிடிச் சங்கம், சிறு படகு உரிமையாளர் சங்கம் உள்ளிட்ட பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது பைசால் காசிம் எம்.பியின் வேண்டுகோளுக்கமைவாக, முதற்கட்ட ஏற்பாடாக மண் நிரப்பி கரையோரத்தை அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான இவ்வேலைத் திட்டத்தை வியாழக்கிழமை (06) ஆரம்பிப்பதற்கும் அதனைத் தொடர்ந்து நிரந்தர தீர்வொன்றை துரிதகதியில் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும் கரையோரம் பேணல் திணைக்களப் பொறியியலாளர் எம்.துளசிதாஸன் உறுதியளித்ததாக முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் தெரிவித்தார்.

உலக செய்திகள்

# ஜூலை 03இல் உலகின் அதிகபட்ச வெப்பம் பதிவு




உலகின் மிக அதிக வெப்பம் பதிவான நாளாக கடந்த 3ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

பருவநிலை மாற்றம் காரணமாக பூமியின் சராசரி வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்நிலையில், கடந்த 3ஆம் திகதி உலகளவில் சராசரி வெப்பநிலை 17 டிகிரி செல்சியஸ் ஆக பதிவாகியுள்ளது. உலகின் மிக அதிக வெப்பம் பதிவான நாளாக இதனை சுற்றுச்சூழல் கண்காணிப்புக்கான அமெரிக்க தேசிய மையம் அறிவித்துள்ளது.

இதற்கு முன்பு 2016ஆம் ஆண்டு 16.92 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவானதே உலகின் அதிகபட்ச வெப்பமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா உட்பட 05 நாடுகளை நிரந்தர உறுப்பினர்களாக்க வேண்டும்

## பிரித்தானியா வலியுறுத்து



ஐ.நா. சபையின் அதிகாரமிக்க அமைப்பான பாதுகாப்பு சபையில் நிரந்தரமற்ற நாடுகளான இந்தியா, பிரேஸில், ஜேர்மனி, ஜப்பான் மற்றும் தென்னாபிரிக்கா உள்ளிட்ட ஐந்து நாடுகளை நிரந்தர உறுப்பினர்களாக இணைத்துக்கொள்ள வேண்டும் என பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் தற்போது அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய 05 நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன.

இந்தியா உட்பட 10 நாடுகள் நிரந்தரமற்ற உறுப்பினர் நாடாக உள்ளன. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சுழற்சி அடிப்படையில் நிரந்தரமற்ற நாடுகள் தெரிவு செய்யப்படுகின்றன.

இந்நிலையில், ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா, பிரேஸில், ஜேர்மனி, ஜப்பான், தென்னாபிரிக்கா உள்ளிட்ட ஐந்து நாடுகளை நிரந்தர உறுப்பினர்களாக்க வேண்டும் என்று பிரித்தானியா கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து ஐ.நாவுக்கான பிரித்தானிய நிரந்தர பிரதிநிதியும் பாதுகாப்பு கவுன்சிலின் ஜூலை மாதத்துக்கான தலைவருமான பார்பரா உட்வர்ட் இந்த மாதத்துக்கான ஐ.நாவின் செயற்பாடுகள் குறித்த கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

பிரித்தானியாவின் இந்த வலியுறுத்தலுக்கு பின்னணியிலுள்ள காரணம் குறித்த உட்வர்ட் தெரிவிக்கையில்,

“இந்தியா மற்றும் பிரேஸிலை நிரந்தர உறுப்பினர்களாக ஆக்குவதன் மூலமாக, பாதுகாப்புச் சபையின் விரிவான புவியியல் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த முடியும். அத்தோடு, சபையின் புவிசார் சமநிலையை உருவாக்க வேண்டும் என்பதும் முக்கிய நோக்கம்'' என்றார்.

21ஆம் நூற்றாண்டின் புவிசார் அரசியல் மாற்றங்களுக்கேற்ப, ஐ.நா. பாதுகாப்பு சபையில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்தியாவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளை மாளிகைக்குள் கொக்கெய்ன் போதைப்பொருள்

## எப்படி வந்ததென விசாரிக்கிறது அமெரிக்க பொலிஸ்



அமெரிக்க ஜனாதிபதி வசிக்கும் வெள்ளை மாளிகையில் கொக்கெய்ன் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் ஜனாதிபதி மாளிகையான வெள்ளை மாளிகை, உச்சகட்ட பாதுகாப்பைக் கொண்டுள்ள கட்டடமாகும். இந்நிலையில் வெள்ளைமாளிகை வளாகத்தில் அங்கு பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டு வரும் அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் பவுடர் போன்ற பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் வெள்ளை மாளிகையில் பரபரப்பு ஏற்பட்டது. இது தாக்குதலுக்கான நாச வேலையாக இருக்கலாம் என்று வெள்ளை மாளிகையில் இருந்தவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். அந்த சமயத்தில் ஜனாதிபதி ஜோ பைடன் வெள்ளை மாளிகையில் இல்லை. முன் எச்சரிக்கையாக வெள்ளை மாளிகை வளாகம் தற்காலிகமாக மூடப்பட்டது.

இதையடுத்து உயர் அதிகாரிகள், தீயணைப்பு துறையினர் உள்ளிட்டோர் அங்கு விரைந்தனர். அந்த மர்மப்பொருள் அபாயகரமானதல்ல என்று தீயணைப்புத்துறை உறுதிப்படுத்தியது. பின்னர் அந்த பவுடர் போன்ற மர்மப்பொருள், பரிசோதனைக்காக அனுப்பப்பட்டதில் அது கொக்கெய்ன் போதைப்பொருள் என கண்டுபிடிக்கப்பட்டது. பலத்த பாதுகாப்புள்ள வெள்ளை மாளிகைக்குள் போதைப்பொருள் எப்படி வந்தது என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது.

# அமெரிக்காவின் 247ஆவது சுதந்திர தினம்



அமெரிக்காவின் 247ஆவது சுதந்திர தினம் நேற்றுமுன்தினம் (04) கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

தலைநகர் வொஷிங்டனிலுள்ள நேஷனல் மோலில் குவிந்த ஆயிரக்கணக்கானோர் இரவு வானை வண்ணமயமாக்கும் வகையில் வாண வேடிக்கைகளை கண்டு மகிழ்ந்தனர்.

லிங்கன் நினைவிடத்திலுள்ள குளத்தின் இருபுறமும் 17 நிமிடங்கள் வாண வேடிக்கை நிகழ்த்தப்பட்டது.

சிக்காக்கோ நகரில் பட்டாசு வெடிக்க அனுமதி இல்லாதபோதும், சுதந்திர தின கொண்டாட்டத்தையொட்டி அந்நகர மக்கள் பல்வேறு பட்டாசுகளை வெடித்து மகிழ்ந்தனர்.

பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்த 13 காலனிகள் 1776ஆம் ஆண்டு இனி பிரித்தானிய மன்னரான மூன்றாம் ஜோர்ஜ் மன்னருக்கு கீழ்படிந்தவை அல்ல என்றும் தாங்கள் ஒன்றுபட்ட, சுதந்திரமான அரசுகள் என்றும் பிரகடனப்படுத்தியதை நினைவுகூரும் வகையில், ஜூலை 4ஆம் திகதி அமெரிக்காவின் சுதந்திர தினமாக கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# சீன குளியல் இல்லத்தில் ‘வாடகை அப்பா’ சேவை



வடகிழக்கு சீனாவின் லியோனிங் மாகாணத்திலுள்ள ஷென்யாங்கில் செயற்பட்டுவரும் ஒரு குளியல் இல்லம் ஆண் குழந்தைகளுடன் வரும் அம்மாக்களுக்கு உதவுவதற்காக (RENT A DAD) என்ற சேவையை ஆரம்பித்துள்ளது.

குழந்தைகளை குளிப்பாட்டுவது, பராமரித்துக் கொள்வது போன்ற வேலைகளை வாடகை அப்பாக்கள் செய்வர். இதற்காக சேவை கட்டணம் வசூலிக்கப்படாததும் வரவேற்பை பெற்றுள்ளது.

இது குறித்து குளியல் இல்லம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்,

ஒரு பெண் தன் மகனுடன் இங்கு வந்தால், அப்பெண் தனது மகனை வாடகை தந்தை என அழைக்கப்படும் அந்த நபரிடம் ஒப்படைத்துவிட்டு, சுதந்திரமாக நீச்சல் குளத்தில் நீராடி அனுபவிக்க முடியும்.

வாடகை அப்பா அதுவரை உங்கள் மகனை பிள்ளை போல் பார்த்துக் கொள்வார். அவனை ஆண்களுக்கான குளியல் பிரிவுக்கு அழைத்துச்செல்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசு இருந்தால் வாழ்க்கையில் அனைத்தையும் வாங்கி விடலாம் என்ற காலத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். அதேபோல் எதையும் வாடகைக்கு விடக்கூடிய கால சூழல் நிலவுகிறது. தனியாக பிள்ளைகளை கவனித்துக்கொள்ள முடியாமல் அவதிப்படும் தாய்மார்களுக்காக தந்தையும் வாடகைக்கு கிடைக்கின்றனர்.

# நெய்மருக்கு 3.3 மில். டொலர் அபராதம்



பிரேஸில் நட்சத்திர வீரரான நெய்மர் பிரேசில் நாட்டின் தென்கிழக்கு பகுதியில் அமைந்துள்ள தனது கடற்கரையோர சொகுசு பங்களாவில் செயற்கையாக ஏரி அமைத்தபோது சுற்றுச்சூழல் துறையின் முறையான உரிமம் இல்லாமல் விதிகளை மீறியதற்காக அந்நாட்டு அரசு 3.3 மில்லியன் டொலர்கள் அபராதம் விதித்துள்ளது.

சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெறாதது, நதி நீரை மடைமாற்றி சேகரித்தது, நிலத்தை வெட்டியது போன்ற விதிமீறல்களில் அவர் ஈடுபட்டார் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அந்தப் பகுதியில் மேற்கொண்டு கட்டுமான பணிகளை மேற்கொள்ள அரசு தடை விதித்துள்ளது. ஆனால், நெய்மர் அந்த ஏரியில் நீராடியதாகவும் பார்ட்டி செய்ததாகவும் உள்ளூர் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. இதனால் அவருக்கு 3.3 மில்லியன் டொலர்கள் அபராதம் விதித்துள்ளது பிரேசில் அரசு. இந்த அபராதம் தொடர்பாக அவர் சட்ட ரீதியாக முறையிட 20 நாட்கள் அவகாசம் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# வரலாற்றுச் சாதனை படைத்த சிங்கப் பெண்



ஐ.சி.சி. மகளிர் ஒருநாள் துடுப்பாட்ட வீராங்கனைகளின் தரவரிசையில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவி சமரி அதபத்து முதலிடத்தை பிடித்து வரலாற்று சாதனையொன்றை பதிவுசெய்தார்.

நியூசிலாந்து மகளிர் அணிக்கு எதிராக நடைபெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் சமரி அதபத்து 03 போட்டிகளில் 02 சதங்களை விளாசியிருந்தார்.

இந்த பிரகாசிப்புகளின் அடிப்படையில் இலங்கை மகளிர் கிரிக்கெட்டில் தரவரிசையில் முதலிடம் பிடித்த முதல் வீராங்கனை என்ற பெருமையை பெற்றுக்கொண்டதுடன், முன்னாள் அதிரடி துடுப்பாட்ட வீரர் சனத் ஜயசூரியவை தொடர்ந்து ஐ.சி.சியின் ஒருநாள் துடுப்பாட்ட தரவரிசையில் முதலிடம் பிடித்த இரண்டாவது இலங்கையர் என்ற சாதனையையும் பதிவுசெய்தார்.

## சிம்பாப்வேயின் உலகக்கிண்ண கனவை தகர்த்த ஸ்கொட்லாந்து

# உலகக்கிண்ணத்துக்கான அணியை தீர்மானிக்கும் ஆட்டம்: ஸ்கொட்லாந்து - நெதர்லாந்து இன்று பலப்பரீட்சை

ஏ. அகீல் சிஹாப்

ஐ.சி.சி. உலகக்கிண்ண தகுதிகாண் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்கொட்லாந்து அணியிடம் 31 ஓட்டங்களினால் தோல்வியடைந்த சிம்பாப்வே அணி உலகக்கிண்ண தொடருக்கு தகுதிபெறும் வாய்ப்பை இழந்தது.

இந்த வருட உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றில் அயர்லாந்து, மேற்கிந்தியத் தீவுகளைத் தொடர்ந்து இப்போது மூன்றாவதாக முழு அந்தஸ்துடைய சிம்பாப்வேயை ஸ்கொட்லாந்து வெற்றிகொண்டு வரலாறு படைத்துள்ளது. இந்தத் தோல்வியை அடுத்து ஸிம்பாப்வேயின் உலகக் கிண்ண எதிர்பார்ப்பு தகர்க்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டி முடிவுடன் சுப்பர் 06 அணிகள் நிலையில் இலங்கைக்கு அடுத்தபடியாக .6 புள்ளிகளைப் பெற்றுள்ள ஸ்கொட்லாந்து 0.296 என்ற நிகர ஓட்ட வேகத்துடன் 2ஆம் இடத்தில் இருக்கிறது. ஸிம்பாப்வேயும் 06 புள்ளிகள் பெற்றுள்ளபோதிலும் அதன் நிகர ஓட்ட வேகம் -0.099 ஆக இருக்கிறது. 04 புள்ளிகளைப் பெற்றுள்ள நெதர்லாந்து -0.042 என்ற நிகர ஓட்ட வேகத்துடன் 4ஆம் இடத்தில் இருக்கிறது.

எனவே இன்று நடைபெறும் ஸ்கொட்லாந்துக்கும் நெதர்லாந்துக்கும் இடையிலான சுப்பர் 06 போட்டியில் வெற்றிபெறும் அணி இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கையுடன் பங்குபற்ற தகுதிபெறும். ஆனால், நெதர்லாந்து மிகப் பெரிய வெற்றியை ஈட்ட வேண்டிவரும்.

# அல்-இஸ்ஸத் சம்பியன் கிண்ணம் பொத்துவில் றொக் சலஞ்சர்ஸ் அணி வசம்



பொத்துவில் நிருபர்

பொத்துவில் அல்-இஸ்ஸத் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட அல்-இஸ்ஸத் சம்பியன் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பொத்துவில் றொக் சலஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தினை சுவீகரித்துக் கொண்டது.

இறுதிப்போட்டி அண்மையில் களப்புக்கட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியில் பொத்துவில் றொக் சலஞ்சர்ஸ் மற்றும் பவர்போய்ஸ் ஆகிய அணிகள் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய றொக் சலஞ்சர்ஸ் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 08 ஓவர்கள் நிறைவில் 02 விக்கெட்டுகளை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். றம்சாத் 56 ஓட்டங்களையும் அம்ஜத் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

118 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பவர்போய்ஸ் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 08 ஓவர்கள் நிறைவில் 08 விக்கெட்டுகளை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்று தோல்வியினைத் தழுவிக் கொண்டனர். இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக றொக் சலஞ்சர்ஸ் அணியின் றம்சாத், சுற்றுத் தொடரின் சிறப்பாட்டக்காரராக பவர்போய்ஸ் அணியின் அக்ரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.



சம்பியன் கிண்ணத்துடன் கழக தலைவர் றபீக் மொஹமட் வாஸித்

# தென்மராட்சி பிக் பாஸ் லீக் தொடரில் நாவற்குழி பிக் பூட்ரேஸ் சம்பியன்




சாவகச்சேரி நிருபர்

தென்மராட்சியை மையப்படுத்தி நடத்தப்பட்ட தென்மராட்சி பிக் பாஸ் லீக் மென்பந்து துடுப்பாட்ட தொடரின் சம்பியன் பட்டத்தை நாவற்குழி பிக் பூட்ரேஸ் அணி தனதாக்கிக் கொண்டது.

10 அணிகள் பங்குபற்றிய மென்பந்து சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி கடந்த வாரம் மட்டுவில் வளர்மதி மைதானத்தில் இடம்பெற்றிருந்தது. இறுதிப்போட்டியில் மட்டுவில் சுப்பர் கில்லீஸ் அணியை எதிர்த்து நாவற்குழி பிக் பூட்ரேஸ் அணி மோதியது.

இறுதிப்போட்டியில் 32 ஓட்டங்களையும் 2 விக்கெட்களையும் சாய்த்த நாவற்குழி பிக் பூட்டேஸ் அணியைச் சேர்ந்த சாகித்தியன் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டிருந்தார். மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும், இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி, லயன் நிர்மலா மகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7